பக்கங்கள் 20 + 03

# மாலை முரசு

முழுக்கம்: 03 | வள்ளுவ ஆண்டு 2058 | சித்திரை 25 வெள்ளிக்கிழமை 08.05.2026 | அதிர்வு 282



## ராஜாங்கனை சத்தாரத்ன தேரர் கைது!

பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் மற்றும் பொலிஸ்மா அதிபர் ஆகியோருக்கு சமூக ஊடகங்கள் வாயிலாக அச்சுறுத்தல் விடுத்த குற்றச்சாட்டில், ராஜாங்கனை சத்தாரத்ன தேரர் 05

‘கனடா முரசு’ இணைக்கப்பட்டுள்ளது

இங்கே CLICK செய்யவும்

# தமிழகத்தின் முதலமைச்சராகின்றார் விஜய்!

## இடதுசாரிகள். வி.சி.க. ஆதரவுடன் பெரும்பான்மை உறுதி



தமிழக சட்டசபைத் தேர்தலில் தனிப் பெரும் கட்சியாக உருவெடுத்த நடிகர் விஜய்யின் தமிழக வெற்றிக் கழகம், இடதுசாரிக் கட்சிகள் மற்றும் விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் ஆதரவுடன் ஆட்சியமைப்பதற்கான பெரும்பான்மையை எட்டியுள்ளது. இதன் மூலம் தமிழகத்தின் அடுத்த முதலமைச்சராக விஜய் பதவியேற்பது உறுதியாகியுள்ளது.

234 தொகுதிகளைக் கொண்ட தமிழக சட்டசபையில் ஆட்சியமைக்க 118 இடங்கள் தேவை என்ற நிலையில், விஜய்யின் த.வெ.க. 108 இடங்களைக் கைப்பற்றியிருந்தது. பெரும்பான்மைக்கு இன்னும் 10 இடங்களே தேவைப்பட்ட நிலையில், பின்வரும் கட்சிகள் இன்று விஜய்க்குத் தங்கள் ஆதரவை உறுதிப்படுத்தின.

* இந்திய தேசிய காங்கிரஸ்: 5 இடங்கள் (ஏற்கனவே ஆதரவு வழங்கியது)
* இந்திய கம்யூனிஸ்ட் கட்சி: 02 இடங்கள் 07




## ஸ்ரீலங்கன் ஏர்லைன்ஸ் முன்னாள் தலைமை நிர்வாக அதிகாரி

# கபில சந்திரசேன மர்ம மரணம்!

## கொள்ளுப்பிட்டியில் சடலமாக மீட்பு
## பொலிஸ் குழுக்கள் தீவிர விசாரணை

ஸ்ரீலங்கன் ஏர்லைன்ஸ் நிறுவனத்தின் முன்னாள் தலைமை நிர்வாக அதிகாரி கபில சந்திரசேன, கொழும்பு - கொள்ளுப்பிட்டிப் பகுதியில் உள்ள ஒரு வீட்டில் மர்மமான முறையில் உயிரிழந்துள்ளார் என்று பொலிஸார் இன்று கோட்டை நீதிவான் நீதிமன்றத்தில் அறிக்கை சமர்ப்பித்துள்ளனர்.

கொள்ளுப்பிட்டி, பெட்ரிஸ் வீதியிலுள்ள இல்லமொன்றின் படுக்கையறையில் இன்று காலை அவர் சடலமாக மீட்கப்பட்டுள்ளார். 05



# வியட்நாம் சோசலிசக் குடியரசின் ஜனாதிபதிக்கு இலங்கை ஜனாதிபதியால் மகத்தான வரவேற்பு!











ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவின் அழைப்பின் பேரில், இலங்கைக்கு உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொண்டுள்ள வியட்நாம் சோசலிசக் குடியரசின் ஜனாதிபதியும் வியட்நாம் கம்யூனிஸ்ட் கட்சியின் மத்திய குழுவின் பொதுச்செயலாளருமான டோ லாமை வரவேற்கும் உத்தியோகபூர்வ நிகழ்வு, ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தலைமையில் இன்று முற்பகல் ஜனாதிபதி அலுவலக வளாகத்தில் நடைபெற்றது.

வியட்நாம் மற்றும் இலங்கைக்கிடையிலான பொருளாதார, கலாசார மற்றும் சமூக உறவுகளை மேலும் வலுப்படுத்தும் நோக்கில் வியட்நாம் ஜனாதிபதி டோ லாம் இந்த உத்தியோகபூர்வ விஜயத்தை மேற்கொண்டுள்ளார்.

பொலிஸ் குதிரைப்படைப் பிரிவினரின் மரியாதையுடன் ஜனாதிபதி அலுவலக வளாகத்துக்கு அழைத்து வரப்பட்ட வியட்நாம் சோசலிசக் குடியரசின் ஜனாதிபதியும் வியட்நாம் கம்யூனிஸ்ட் கட்சியின் மத்திய குழுவின் பொதுச் செயலாளருமான டோ லாமுக்கு ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவினால் மகத்தான வரவேற்பு அளிக்கப்பட்டது.

இரு நாடுகளினதும் தேசிய கீதங்கள் இசைக்கப்பட்டதைத் தொடர்ந்து, வியட்நாம் ஜனாதிபதி டோ லாமை வரவேற்கும் உத்தியோகபூர்வ நிகழ்வு ஆரம்பமானது. இதன்போது முழுமையான அரச கௌரவத்துடன் மரியாதை வேட்டுக்கள் தீர்க்கப்பட்டு வியட்நாம் ஜனாதிபதி வரவேற்கப்பட்டார்.

வியட்நாம் ஜனாதிபதி டோ லாம் மற்றும் ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க ஆகியோர் முப்படையினரின் கௌரவ மரியாதையை ஏற்றுக்கொண்டதன் பின்னர், வியட்நாம் – இலங்கை அரச பிரதிநிதிகள் அறிமுகப்படுத்தப்பட்டனர். இதனைத் தொடர்ந்து இரு நாட்டுத் தலைவர்களும் உத்தியோகபூர்வ புகைப்படம் பிடிக்கும் நிகழ்விலும் இணைந்து கொண்டனர்.

இலங்கை அரசைப் பிரதிநிதித்துவப் படுத்தி வெளிநாட்டலுவல்கள், வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் சுற்றுலாத் துறை அமைச்சர் விஜித ஹேரத், தொழில் அமைச்சர் மற்றும் நிதி, திட்டமிடல் பிரதி அமைச்சர் கலாநிதி அனில் ஜயந்த பெர்னாண்டோ, விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப அமைச்சர் பேராசிரியர் கிரிஷாந்த அபேசேன, புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர் கலாநிதி ஹினிதும சுனில் செனவி, சுற்றாடல் அமைச்சர் வைத்தியர் தம்மிக்க படபெந்தி, பொதுமக்கள் பாதுகாப்பு மற்றும் நாடாளுமன்ற அலுவல்கள் அமைச்சர் ஆனந்த விஜேபால, ஜனாதிபதியின் செயலாளர் கலாநிதி நந்திக்க சனத் குமாநாயக்க, பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் எயார் வைஸ் மார்ஷல் சம்பத் துய்யகொந்தா (ஓய்வுபெற்ற), வெளிநாட்டலுவல்கள் அமைச்சின் செயலாளர் அருணி ரணராஜா உள்ளிட்ட இரு நாடுகளினதும் சிரேஷ்ட அதிகாரிகள் பலரும் இந்த நிகழ்வில் கலந்துகொண்டனர்.

# வியட்நாம் – இலங்கை இடையே ஐந்து புரிந்துணர்வு ஒப்பந்தங்கள்








வியட்நாம் மற்றும் இலங்கை இடையே பல்வேறு துறைகள் சார்ந்து கைச்சாத்திடப்பட்ட 5 புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் பரிமாறிக் கொள்ளும் நிகழ்வு, இலங்கை ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க மற்றும் வியட்நாம் சோசலிசக் குடியரசின் ஜனாதிபதியும் வியட்நாம் கம்யூனிஸ்ட் கட்சியின் மத்திய குழுவின் பொதுச் செயலாளருமான டோ லாம் ஆகியோர் முன்னிலையில் இன்று முற்பகல் ஜனாதிபதி அலுவலகத்தில் நடைபெற்றது.

வியட்நாம் – இலங்கை உறவுகளில் ஒரு புதிய அத்தியாயத்தைக் குறிக்கும் வகையில் சுற்றுலாத் துறை, பாதுகாப்பு அலுவல்கள் தொடர்பு, மதம், சிவில், வர்த்தகம், போக்குவரத்து மற்றும் பொருளாதாரம், விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்பம் ஆகிய துறைகள் தொடர்பான புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் பரிமாறிக்கொள்ளப்பட்டன.

அதன்படி,

* பொலிஸ் பயிற்சி மற்றும் விஞ்ஞான ஆராய்ச்சித் துறையில் ஒத்துழைப்புக்காக, வியட்நாமின் பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சின் மக்கள் பொலிஸ் அகடமி மற்றும் இலங்கை தேசிய பொலிஸ் அகடமி ஆகியவற்றுக்கு இடையிலான புரிந்துணர்வு ஒப்பந்தம், வியட்நாம் பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் ஜெனரல் லுவோங் டேம் குவாங் மற்றும் பொதுமக்கள் பாதுகாப்பு மற்றும் நாடாளுமன்ற அலுவல்கள் அமைச்சர் ஆனந்த விஜேபால ஆகியோரால் பரிமாறிக்கொள்ளப்பட்டது.

* விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்பத் துறைகளில் ஒத்துழைப்புக்காக, இலங்கை விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்ப அமைச்சுக்கும் வியட்நாம் விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்ப அமைச்சுக்கும் இடையிலான புரிந்துணர்வு ஒப்பந்தம், வியட்நாமின் விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்ப அமைச்சர் வூ ஹாய் குவான் மற்றும் விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்ப அமைச்சர் கிரிஷாந்த அபேசேன ஆகியோரினால் பரிமாறிக்கொள்ளப்பட்டது.

* வியட்நாமின் இன மற்றும் மத விவகாரங்கள் அமைச்சு மற்றும் இலங்கையின் புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சு ஆகியவற்றுக்கு இடையிலான புரிந்துணர்வு ஒப்பந்தமானது, வியட்நாமிய இன மற்றும் மத விவகாரங்கள் அமைச்சர் நுயென் டின் காங் மற்றும் புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர் கலாநிதி ஹினிதும சுனில் செனவி ஆகியோரால் பரிமாறிக்கொள்ளப்பட்டது.

* வியட்நாமின் கலாசாரம், விளையாட்டு மற்றும் சுற்றுலா அமைச்சு மற்றும் இலங்கையின் புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சு ஆகியவற்றிற்கிடையிலான கலாசார ஒத்துழைப்பு குறித்த புரிந்துணர்வு ஒப்பந்தம், வியட்நாமின் கலாசாரம், விளையாட்டு மற்றும் சுற்றுலா பிரதி அமைச்சர் ஹோ அன் பொங் மற்றும் புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர் கலாநிதி ஹினிதும சுனில் செனவி ஆகியோரால் பரிமாறிக்கொள்ளப்பட்டது.

* வியட்நாமின் கலாசார, விளையாட்டு மற்றும் சுற்றுலா அமைச்சுக்கும், இலங்கையின் சுகாதாரம் மற்றும் வெகுசன ஊடக அமைச்சுக்கும் இடையில் தகவல் மற்றும் தொடர்பாடல் துறையில் ஒத்துழைப்புக்கான புரிந்துணர்வு ஒப்பந்தம், வியட்நாமின் கலாசார, விளையாட்டு மற்றும் சுற்றுலா பிரதி அமைச்சர் ஹோ அன் பொங் மற்றும் வெகுசன ஊடக பிரதி அமைச்சர் கலாநிதி கௌசல்யா ஆரியரத்ன ஆகியோரால் பரிமாறிக் கொள்ளப்பட்டது.

வியட்நாம் அரசால் இலங்கைக்கு நன்கொடையாக வழங்கப்பட்ட 100 மெட்ரிக் தொன் உரத் தொகுதி, வியட்நாம் நிதி அமைச்சர் என்கோ வென் டுவானால் விவசாய அமைச்சின் செயலாளர் டி. பி. விக்கிரமசிங்கவிடம் உத்தியோகபூர்வமாகக் கையளிக்கப்பட்டது.

இலங்கை மற்றும் வியட்நாம் இடையிலான இராஜதந்திர உறவுகளின் 55 ஆவது ஆண்டு நிறைவைக் கொண்டாடுவதற்காக, ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க 2025ஆம் ஆண்டு வியட்நாமுக்கு மேற்கொண்ட அரச பயணத்தைத் தொடர்ந்து, இலங்கை ஜனாதிபதியின் அழைப்பையேற்று வியட்நாம் ஜனாதிபதியின் இந்த அரச விஜயம் இடம்பெறுகின்றது.

வியட்நாம் ஜனாதிபதி டோ லாமுடன் அந்நாட்டு அரசின் சிரேஷ்ட அமைச்சர்கள் மற்றும் வியட்நாம் கம்யூனிஸ்ட் கட்சியின் மத்திய குழுவின் செயலாளர் உள்ளிட்ட முக்கிய அரசியல் தலைவர்கள் குழுவொன்றும் இந்தப் பயணத்தில் இணைந்து கொண்டுள்ளனர்.

## செம்மணி அகழ்வு:

# மயான எரிதகன மேடையை உடைத்து மனித என்புகளை மீட்க நடவடிக்கை!





**(பிரபாகரன் டிலக்சன்)**

யாழ்ப்பாணம், செம்மணி மனிதப் புதைகுழியின் மூன்றாம் கட்ட அகழ்வுப் பணிகளின் போது, சித்துப்பாத்தி இந்து மயான எரிதகன மேடையின் அத்திவாரத்துக்கு அடியில் அடையாளம் காணப்பட்ட மனித என்புத் தொகுதியை அகழ்ந்து எடுப்பதற்கு, குறித்த மேடையை உடைக்க வேண்டிய தேவை ஏற்பட்டுள்ளது என்று சட்டத்தரணி வி.எஸ்.நிரஞ்சன் தெரிவித்தார்.

இது தொடர்பில் உரிய அதிகாரிகளுடன் கலந்துரையாடி, நீதிமன்ற அனுமதியைப் பெற்ற பின்னரே மேலதிக நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

செம்மணி புதைகுழி வழக்கில் காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்கள் சார்பில் முன்னிலையாகும் சட்டத்தரணி வி.எஸ்.நிரஞ்சன், ஊடகவியலாளர்களின் கேள்விகளுக்கு பதிலளிக்கையிலேயே இதனைத் தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் கூறுகையில்,

”மயான எரிதகன மேடையின் அத்திவாரத்துக்குக் கீழாக அடையாளம் காணப்பட்ட மனித என்புத் தொகுதி இதுவரை இலக்கமிடப்படவில்லை. பொதுவாக, ஒரு மனித என்புத் தொகுதி முழுமையாக அடையாளம் காணப்பட்டு, மண்டையோடு முதல் பாதம் வரை சுத்தப்படுத்தப்பட்டு வரைபடம் வரையப்பட்ட பின்னரே அதற்கு இலக்கமிடப்படும்.

தற்போது அடையாளம் காணப்பட்டுள்ள என்புத் தொகுதியின் மண்டையோடு மாத்திரம் அத்திவாரத்துக்கு வெளியேயும், ஏனைய பகுதிகள் அத்திவாரத்துக்கு உள்ளேயும் காணப்படுகின்றன.

எனவே, ஏனைய பகுதிகளில் உள்ள என்புத் தொகுதிகளை அகழ்ந்து எடுத்த பின்னர், இந்தத் தகன மேடையை உடைத்தே குறித்த என்புத் தொகுதியை முழுமையாக மீட்க வேண்டியுள்ளது.

இது தொடர்பான சட்ட ரீதியான அனுமதிகளைப் பெற்ற பின்னர் அடுத்தகட்ட நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும்.” – என்றார்.

நேற்றுமுன்தினம் அடையாளம் காணப்பட்ட இந்த மனித என்புத் தொகுதியானது, செம்மணி புதைகுழி விவகாரத்தில் மிக முக்கியமான ஒரு தடயமாகப் பார்க்கப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

# மதுரங்குளியில் கோர விபத்து! தரைமட்டமான பஸ் தரிப்பிடம்!!

## கொள்கலன் லொறியின் சாரதி படுகாயம்





**(க.மகாதேவன்)**

புத்தளம், மதுரங்குளி நகரில் இன்று காலை இடம்பெற்ற பாரிய விபத்தில் கொள்கலன் லொறியின் சாரதி படுகாயமடைந்ததுடன், பொதுச் சொத்துக்களுக்கும் பாரிய சேதம் ஏற்பட்டுள்ளது.

மதுரங்குளி நகரின் பிரதான பாடசாலையொன்றுக்கு முன்பாக பயணித்த கொள்கலன் லொறி, சாரதியின் கட்டுப்பாட்டை இழந்து வீதியை விட்டு விலகிச் சென்றமையாலேயே இவ்விபத்து ஏற்பட்டுள்ளது.

கட்டுப்பாட்டை இழந்த கொள்கலன் லொறி, வீதியோரத்தில் இருந்த பஸ் தரிப்பிடத்தை மோதித் தள்ளியதில் அது முழுமையாகச் சேதமடைந்து தரைமட்டமானது. அதனைத் தொடர்ந்து வீதியின் மறுபக்கத்துக்கு லொறி பாய்ந்த வேளையில், புத்தளம் திசையில் இருந்து வந்த விமானப்படைக்குச் சொந்தமான டிபென்டர் ரக வாகனமும், மற்றுமொரு லொறியும் குறித்த கொள்கலன் லொறியுடன் மோதி விபத்துக்குள்ளாகின.

இவ்விபத்தில் பலத்த காயமடைந்த கொள்கலன் லொறியின் சாரதி, உடனடியாக மீட்கப்பட்டு புத்தளம் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். டிபென்டர் வாகனத்தில் பயணித்த விமானப்படையினர் எவருக்கும் காயங்கள் ஏற்படவில்லை என்று பொலிஸார் உறுதிப்படுத்தியுள்ளனர்.

விபத்து இடம்பெற்ற தருணத்தில் பாடசாலை மாணவர்கள் அல்லது பயணிகள் எவரும் பஸ் தரிப்பிடத்தில் இல்லாத காரணத்தால் பெரும் உயிர்ச்சேதம் தவிர்க்கப்பட்டுள்ளது.

விபத்தால் வாகனங்களுக்கும் பலத்த சேதம் ஏற்பட்டுள்ளதுடன், சம்பவம் தொடர்பில் மதுரங்குளி பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

# வடக்கில் தற்காலிக ஊழியர்களை நிரந்தரமாக்க ஆளுநர் உத்தரவு!

## இரண்டு வார காலக்கெடு விதிப்பு



அரச திணைக்களங்களில் பல ஆண்டுகளாக தற்காலிக, அமைய (நாளாந்த), பதிலீட்டு, ஒப்பந்த மற்றும் சலுகை அடிப்படையின் பேரில் பணியாற்றும் ஊழியர்களை அரச சேவைக்கு நிரந்தரமாக உள்வாங்குவது தொடர்பில் அரசால் புதிதாக வெளியிடப்பட்டுள்ள சுற்றறிக்கைக்கு அமைவாக, வடக்கு மாகாண அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்கள் உரிய நடவடிக்கைகளை இரு வார காலத்தினுள் துரிதமாக நிறைவு செய்ய வேண்டும் என்று வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் பணிப்புரை விடுத்துள்ளார்.

வடக்கு மாகாண அமைச்சுக்களின் செயலாளர்கள், பிரதிப் பிரதம செயலாளர்கள் மற்றும் மாகாணத் திணைக்களத் தலைவர்களுடனான விசேட முகாமைத்துவக் கலந்துரையாடல், ஆளுநரின் தலைமையில் இன்று வெள்ளிக்கிழமை ஆளுநர் செயலகத்தில் நடைபெற்றது.

இக்கலந்துரையாடலின் போதே ஆளுநர் அவர்கள் இந்த அறிவுறுத்தலை வழங்கினார்.

அரச நிறுவனங்களில் தற்காலிக, அமைய (நாளாந்த), பதிலீட்டு, ஒப்பந்த மற்றும் சலுகை அடிப்படையின் பேரில் சேவைக்கு ஆட்சேர்ப்புச் செய்யப்பட்டு, தொடர்ச்சியாக 180 நாள்களைப் பூர்த்தி செய்த ஊழியர்களுக்கு நிரந்தர நியமனங்களை வழங்குவதில் நீண்டகாலமாகப் பல சிக்கல்கள் நிலவி வந்தன. அரச நிர்வாகச் சுற்றறிக்கை 25ஃ2014 மற்றும் 29/2019 ஆகியவற்றின் அடிப்படையில் நியமனங்களை வழங்குவதில் காணப்பட்ட இத்தடைகளை நீக்கி, இப்பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வு காணும் நோக்கில் ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்கவால் 2026ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டத்தில் விசேட முன்மொழிவு ஒன்று முன்வைக்கப்பட்டிருந்தது. அதற்கமைவாகவே தற்போது அரச நிர்வாகச் சுற்றறிக்கை 11/2026 வெளியிடப்பட்டுள்ளது.

இந்த புதிய சுற்றறிக்கையின் மூலம், நிரந்தர நியமனங்கள் வழங்குவதில் இதுவரை காலமும் காணப்பட்ட நிர்வாகத் தடைகள் முற்றாக நீங்குவதுடன், ஊழியர்களின் நீண்டகாலப் பிரச்சினைகளுக்கும் முற்றுப்புள்ளி வைக்கப்படும் என்று ஆளுநர் தனதுரையில் சுட்டிக்காட்டினார்.

இக்கலந்துரையாடலில், வடக்கு மாகாண பிரதிப் பிரதம செயலாளர் (ஆளணியும் பயிற்சியும்) செ.பிரணவநாதன், புதிய சுற்றறிக்கையின் பிரதான உள்ளடக்கங்கள் குறித்தும், அதனை நடைமுறைப்படுத்தும் பொறிமுறைகள் குறித்தும் அதிகாரிகளுக்குத் தெளிவுபடுத்தினார்.

அத்துடன், அரச நிர்வாகச் சுற்றறிக்கை 25ஃ2014 இன் கீழ் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அனுமதி இதுவரை கிடைக்கப்பெறாத 107 ஊழியர்கள் வடக்கு மாகாணத்தில் உள்ளமை குறித்தும், அரச நிர்வாகச் சுற்றறிக்கை 29ஃ2019 இன் கீழ் நிரந்தர நியமனம் கோரி விண்ணப்பித்த 307 ஊழியர்கள் உள்ளமை குறித்தும் அவர் சுட்டிக்காட்டினார். இவர்களில் தற்போது வரையில் சேவையில் தொடரும் ஊழியர்கள் தொடர்பான திணைக்கள ரீதியான தரவுகளையும் அவர் சபைக்குச் சமர்ப்பித்தார்.

இதன்போது, நியமன அதிகாரிகள் நிரந்தர நியமனங்களை வழங்குவதில் தாங்கள் எதிர்கொள்ளும் நடைமுறைச் சிக்கல்கள் மற்றும் தற்போதைய நிலைமைகளைக் கௌரவ ஆளுநரின் கவனத்துக்குக் கொண்டு வந்தனர்.

அனைத்து விடயங்களையும் கேட்டறிந்த ஆளுநர், அதிகாரிகளுக்குப் திட்டவட்டமான பணிப்புரைகளை வழங்கினார்:

அரச நிர்வாகச் சுற்றறிக்கை 11ஃ2026 இன் நியமங்களின்படி, தகைமை பெற்றுள்ள அனைவருக்கும் எவ்வித தாமதமுமின்றி வழமையான அனுமதி நடைமுறைகளினூடாக நிரந்தர நியமனங்களை இரு வாரங்களுக்குள் விரைவாக வழங்க வேண்டும்.

முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்திடம் அனுமதி பெறவேண்டியுள்ள நியமனங்கள் தொடர்பில், உரிய வழிமுறைகளினூடாக உடனடியாகக் கோரிக்கைகளைச் சமர்ப்பித்து துரிதமாக அனுமதிகளைப் பெற்றுக்கொள்ள வேண்டும்.

புதிய சுற்றறிக்கையின் கீழ் உள்ளடக்கப்பட முடியாமல், நிரந்தர நியமனம் பெறத் தகுதியற்றவர்களாக ஏதேனும் ஊழியர்கள் இருப்பின், அவர்களைக் கைவிடாது, அவர்களது முழுமையான விவரங்கள் அடங்கிய பட்டியலைத் தயாரித்துச் சமர்ப்பிக்க வேண்டும். அவை தொடர்பில் உரிய தரப்பினருடன் கலந்துரையாடி அவர்களுக்கான மாற்றுத் தீர்வுகள் குறித்து ஆராயப்படும் என்று ஆளுநர் குறிப்பிட்டார்.

## முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

### கபில சந்திரசேன...

சம்பவ இடத்துக்குக் கொழும்பு மேலதிக நீதிவான் பசன் அமரசேகர மற்றும் கொழும்பு தடயவியல் மருத்துவ அதிகாரி ஆகியோர் நேரில் சென்று முதற்கட்ட விசாரணைகளை முன்னெடுத்தனர்.

மேற்கு மாகாண சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் சஜீவ மெதவத்த மற்றும் கொழும்பு பிரதிப் பொலிஸ்மா அதிபர் நிஷாந்த சொய்சா ஆகியோரின் மேற்பார்வையில், இந்த மரணம் தொடர்பான விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

ஸ்ரீலங்கன் ஏர்லைன்ஸ் நிறுவனத்துக்கு14 எயார்பஸ் விமானங்களை கொள்வனவு செய்த கொடுக்கல் வாங்கலில், சுமார் 2 மில்லியன் அமெரிக்க டொலர் இலஞ்சமாகப் பெற்றதாகக் கபில சந்திரசேன மற்றும் அவரது மனைவி மீது நீண்டகாலமாகக் குற்றம் சுமத்தப்பட்டிருந்தது. இது தொடர்பாக கடந்த மார்ச் 12ஆம் திகதி அவர் மீண்டும் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்தார்.

விசாரணைகளின் போது, குறித்த இஞ்சப் பணத்தில் 20 மில்லியன் ரூபாவை முன்னாள் சிவில் விமானப் போக்குவரத்து அமைச்சர் பிரியங்கர ஜயரத்னவுக்கும், 60 மில்லியன் ரூபாவை முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கும் வழங்கியதாக கபில சந்திரசேன ஒப்புக்கொண்டதாக நீதிமன்றில் தெரிவிக்கப்பட்டது. எனினும், அந்த வாக்குமூலம் அச்சுறுத்தலின் கீழேயே பெறப்பட்டதாக அவரது சட்டத்தரணிகள் வாதிட்டனர். இது தொடர்பாக எதிர்வரும் மே 12ஆம் திகதி வாக்குமூலம் வழங்குமாறு முன்னாள் ஜனாதிபதி உள்ளிட்டோருக்கு அழைப்பாணை விடுக்கப்பட்டிருந்தது.

கடந்த மே 5ஆம் திகதி கடும் நிபந்தனைகளுடன் கபில சந்திரசேன பிணையில் விடுவிக்கப்பட்டார். எனினும், பிணை நிபந்தனைகளை நிறைவேற்ற போலி நபர்களை உறவினர்களாக முன்னிலைப்படுத்தியமை அம்பலமானதையடுத்து, நீதிமன்ற நம்பிக்கையை மீறிய குற்றச்சாட்டில் நேற்று கொழும்பு தலைமை நீதிவான் அவருக்கு எதிராக மீண்டும் பிடியாணை பிறப்பித்திருந்தார்.

இந்தநிலையில், நீதிமன்றத்தால் தேடப்பட்டு வந்த அவர் இன்று காலை மர்மமான முறையில் சடலமாக மீட்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

### ராஜாங்கனை...

மத்திய குற்றப் புலனாய்வுப் பணியக அதிகாரிகளால்கைதுசெய்யப்பட்டுள்ளார்.

பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் ஆனந்த விஜேபால மற்றும் பொலிஸ்மா அதிபர் பிரியந்த வீரசூரிய ஆகியோருக்கு எதிராக, சமூக ஊடகங்கள் ஊடாக அச்சுறுத்தல் விடுத்தமை தொடர்பாகக் கிடைக்கப் பெற்ற முறைப்பாடுகளையடுத்தே இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இது குறித்து மத்திய குற்றப் புலனாய்வுப் பணியகம் முன்னெடுத்த விரிவான விசாரணைகளைத் தொடர்ந்து, இந்த விசேட கைது நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கைது செய்யப்பட்ட தேரரிடம் மேலதிக விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருவதுடன், அவர் நீதிமன்றத்தில் ஆஜர் படுத்தப்படவுள்ளார்.

# இங்கு சிங்கள மக்கள் வீதியில் இறங்கினால் எவரும் தப்ப முடியாது!

## நாட்டைப் பிளவுபடுத்தும் முயற்சிகளுக்குச் சீலரத்ன தேரர் கடும் எச்சரிக்கை

இனவாதத்தைத் தூண்டி நாட்டைப் பிளவுபடுத்த எத்தனித்தால், சிங்கள மக்கள் அதற்குப் பாடம் புகட்டுவார்கள் என்று ஜனசெத பெரமுன கட்சியின் தலைவர் பத்தரமுல்ல சீலரத்ன தேரர் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

யாழ்ப்பாணத்தை ஆளுவதற்கு தமிழக நடிகர் விஜயை, நாடாளுமன்ற உறுப்பினர் அர்ச்சுனா அழைப்பதானது சிங்கள மக்களின் பொறுமையைச் சோதிக்கும் செயல் என்றும் அவர் சாடினார்.

“முப்பது வருட கால யுத்தத்தில் முப்படைகளும் உயிரைப் பணையம் வைத்தே வடக்கை மீட்டெடுத்தன. அந்த இருண்ட காலத்தை மீண்டும் உருவாக்க முற்பட வேண்டாம். சிங்கள மக்கள் வீதிக்கு இறங்கினால் எவரும் தப்ப முடியாது” என்றும் அவர் காட்டமாகத் தெரிவித்தார்.

மத்திய வங்கியின் உதவிப் பணிபாளர் ஒருவர் கொடூரமாகக் கொலை செய்யப்பட்டார் என்று நாடாளுமன்றத்தில் வெளியாகும் செய்திகள் அதிர்ச்சியளிப்பதாகக் குறிப்பிட்ட தேரர், இது உண்மையானால் அரசு உடனடியாகப் பதிலளிக்க வேண்டும் என்றும் வலியுறுத்தினார். இது 1988, 1989 காலப்பகுதியின் அடக்குமுறைகளை நினைவுபடுத்துவதாகவும் அவர் சுட்டிக்காட்டினார்.




அரசின் நிர்வாகச் சீர்கேடுகள் குறித்து அவர் கருத்துத் தெரிவிக்கையில்,

“மூன்று வேளை உண்ட மக்கள் இன்று இரண்டு வேளை மட்டுமே உண்ணும் அவலநிலை கிராமங்களில் ஏற்பட்டுள்ளது. அத்தியாவசியப் பொருள்களின் விலை வானைத் தொடுகின்றது.

ராஜபக்ஷக்களின் பணம் உகாண்டாவில் இருப்பதாகக் கூறியவர்கள், இப்போது ஏன் அதை மீட்க நடவடிக்கை எடுக்கவில்லை?

தேர்தல் காலத்தில் வாக்குறுதி அளித்தபடி இளைஞர்களுக்கோ, பல்கலைக்கழக மாணவர்களுக்கோ வேலைவாய்ப்புகள் வழங்கப்படவில்லை.

சிங்களப் புத்தாண்டு போன்ற கலாசார நிகழ்வுகளைப் புறக்கணிக்கும் ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க, கோயில்களுக்குச் சென்று வழிபாடுகளில் ஈடுபடுகின்றார். மக்களின் வரிப்பணத்தில் வாழ்பவர்கள் இன்று மக்களின் இரத்தத்தையே உறிஞ்சிக் குடிக்கின்றார்கள்.” – என்றும் அவர் சாடினார்.

பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் சிறையில் இருக்க வேண்டியவர்கள் இன்று வெளியில் உலவுகின்றார்கள் என்றும், அரசு சிங்கள மக்களின் உணர்வுகளுக்கு மதிப்பளிப்பதில்லை என்றும் குற்றம் சுமத்திய சீலரத்ன தேரர், பல்கலைக்கழக மாணவர்களுடன் இணைந்து அரசுக்கு எதிராகப் போராடப் போவதாகவும் எச்சரிக்கை விடுத்தார்.

# கிழக்கு பல்கலையில் கட்டடம் இடிந்து வீழ்ந்து விபத்து! நடனப் பயிற்சியில் ஈடுபட்டிருந்த 3 மாணவிகள் காயம்!!

## நிர்வாகத்தின் அலட்சியத்தால் நேர்ந்த சோகம்

**(கனகராஜா சரவணன்)**

மட்டக்களப்பு, கல்லடியில் அமைந்துள்ள கிழக்கு பல்கலைக்கழகத்தின் சுவாமி விபுலானந்த இசை நடனக் கல்லூரியின் கட்டடப் பகுதி ஒன்று இடிந்து வீழ்ந்ததில், நடனப் பயிற்சியில் ஈடுபட்டிருந்த இறுதி வருட மாணவிகள் மூவர் படுகாயமடைந்துள்ளனர்.

நேற்றுமுன்தினம் புதன்கிழமை இடம்பெற்ற இச்சம்பவத்தில் காயமடைந்த மாணவிகள் மூவரும் உடனடியாக மீட்கப்பட்டு, மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இந்தச் சம்பவம் குறித்து மேலும் தெரியவருவதாவது,

குறித்த கட்டடம் சுமார் 5 வருடங்களுக்கு முன்னர் மேல் மாடித் திட்டத்துடன் ஆரம்பிக்கப்பட்டது. எனினும், அதன் கீழ்ப் பகுதி மாத்திரம் நிர்மாணிக்கப்பட்ட



நிலையில், கட்டடத்தின் உறுதித்தன்மை குறித்து பல்வேறு தரப்பிலிருந்தும் விமர்சனங்கள் முன்வைக்கப்பட்டிருந்தன. இவ்வாறானதொரு சர்ச்சைக்குரிய சூழலிலேயே மாணவர்கள் பாவனைக்காக இக்கட்டடம் திறந்து விடப்பட்டிருந்தது.

சம்பவ தினத்தன்று, இறுதி வருட மாணவிகள் கட்டடத்தினுள் நடனப் பயிற்சியில் ஈடுபட்டிருந்தபோது, மேல்தளத்தின் ஒரு பகுதி திடீரென இடிந்து அவர்கள் மீது விழுந்துள்ளது. நடனத்தின் அதிர்வுகளைத் தாங்க முடியாமல் பலவீனமான நிலையில் இருந்த கட்டடப் பகுதி இடிந்துள்ளது என்று கூறப்படுகின்றது.

இக்கட்டடத்தின் நிர்மாணத் தரம் தொடர்பாக ஏற்கனவே பல சர்ச்சைகள் எழுந்திருந்ததோடு, அதன் பொறியியலாளர் தனது பதவியை இராஜினாமா செய்திருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

இச்சம்பவம் பல்கலைக்கழக மாணவர்கள் மற்றும் பெற்றோரிடையே பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

# முதலாம் பக்கத் தொடர்ச்சி

## தமிழகத்தின்...

* இந்திய கம்யூனிஸ்ட் கட்சி (மார்க்சிஸ்ட்): 02 இடங்கள்

* விடுதலைச் சிறுத்தைகள் கட்சி: 02 இடங்கள்

இந்த ஆதரவு கடிதங்கள் ஆளுநரிடம் சமர்ப்பிக்கப்படவுள்ள நிலையில், விஜய்யின் கூட்டணி பலம் 119 ஆக உயர்ந்து, பெரும்பான்மை இலக்கைத் தாண்டியுள்ளது.

விஜய் முதலமைச்சராவது உறுதியானதையடுத்து, சென்னையில் உள்ள த.வெ.க. தலைமையகம் மற்றும் பனையூர் இல்லத்துக்கு முன்பாக ஆயிரக்கணக்கான தொண்டர்கள் திரண்டு பட்டாசுகள் வெடித்தும், இனிப்புகள் வழங்கியும் கொண்டாடி வருகின்றனர்.

அவர்கள் "தமிழகத்தின் புதிய விடியல்" எனத் தொண்டர்கள் முழக்கமிட்டு வருகின்றனர்.

சுமார் 59 ஆண்டுகளாகத் தமிழக அரசியலில் ஆதிக்கம் செலுத்தி வந்த திராவிடக் கட்சிகளின் (தி.மு.க., அ.தி.மு.க.) பிம்பத்தை உடைத்து, முதல் தேர்தலிலேயே விஜய் இந்தச் சாதனையைப் படைத்துள்ளார்.

முன்னாள் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் தனது கொளத்தூர் தொகுதியில் தோல்வியடைந்துள்ள நிலையில், தி.மு.க. 59 இடங்களையும், அ.தி.மு.க. 47 இடங்களையும் பெற்றுள்ளன.

எதிர்வரும் மே 12ஆம் திகதிக்கு முன்னர் புதிய அரசு பதவியேற்பதற்கான நடவடிக்கைகள் துரிதப்படுத்தப்பட்டுள்ளன.

# விஜய்க்கு எமது நாட்டுத் தலைவர்கள் வாழ்த்துத் தெரிவிப்பது வெட்கக்கேடு!

## பத்தரமுல்ல சீலரத்ன தேரர் கடும் சாடல்



இந்தியாவின் மாநில அரசியல்வாதிகளுக்கு நாட்டின் தலைவர்கள் என்ற அந்தஸ்தை வழங்கி, எமது நாட்டுத் தலைவர்கள் வாழ்த்துத் தெரிவிப்பது வெட்கக்கேடான செயல் என்று ஜனசெத பெரமுன கட்சியின் தலைவர் பத்தரமுல்ல சீலரத்ன தேரர் கடுமையாகச் சாடியுள்ளார்.

பத்தரமுல்லையில் உள்ள அக்கட்சியின் காரியாலயத்தில் நேற்று புதன்கிழமை நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

"எமது நாட்டின் சில அரசியல் தலைவர்கள் சுயகௌரவத்தை மறந்து செயற்படுகின்றார்கள். ஒரு நாட்டின் தலைவர், மற்றொரு நாட்டின் தலைவருக்கே உத்தியோகபூர்வ வாழ்த்துகளைத் தெரிவிக்க வேண்டும். ஆனால், தமிழகத்தில் ஒரு கட்சியின் தலைவராக இருக்கும் நடிகர் விஜய்க்கு, எமது நாட்டுத் தலைவர்கள் "எக்ஸ்" தளம் ஊடாகப் போட்டி போட்டுக்கொண்டு வாழ்த்துத் தெரிவிக்கின்றனர். இது அவர்களின் மதியீனத்தையே காட்டுகின்றது." - என்று தேரர் குறிப்பிட்டார்.

இந்திய அரசியல்வாதிகள் என்றால் எமது நாட்டுத் தலைவர்களுக்கு அத்தனை இனிப்பாக இருக்கின்றது எனக் கேலி செய்த அவர், மேலும் தெரிவித்ததாவது:-

"எமது நாட்டு மாகாண சபை அமைச்சர்களுக்கு இந்தியாவின் தலைவர்கள் எப்போதாவது இதுபோன்று வாழ்த்து அனுப்பியதுண்டா?

கச்சதீவு விவகாரத்தை மையப்படுத்தி, புலம்பெயர் அமைப்புகளின் விருப்பத்துக்கு ஏற்ப காய்நகர்த்தும் விஜய் போன்றவர்கள், இலங்கையின் உள்விவகாரங்களில் தலையிட அனுமதிக்க முடியாது.

விஜய் இந்தியாவின் ஒரு மாநிலத் தலைவரே தவிர, முழு இந்தியாவுக்கும் தலைவர் அல்ல என்பதைப் புரிந்து கொள்ள வேண்டும்.

நாடாளுமன்றத்துக்குள் தெரிவிக்கும் கருத்துக்களைப் பொதுவெளியில் கூறினால், வீதியில் இறங்கி நடமாட முடியாத நிலையை மக்கள் ஏற்படுத்துவார்கள்.

இலங்கையின் இறையாண்மையைப் பாதுகாக்க சிங்கள, தமிழ் மற்றும் முஸ்லிம் மக்கள் அனைவரும் ஒன்றிணைந்து தயாராக இருக்கின்றோம்." - என்றார்.

# உள்நாட்டுத் துப்பாக்கியுடன் விவசாயி கைது!

**(கனகராஜா சரவணன்)**

மட்டக்களப்பு, கரடியனாறு பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பெருவெளி வயல் பகுதியில், உள்நாட்டில் தயாரிக்கப்பட்ட சிறிய ரக துப்பாக்கி ஒன்றுடன் 41 வயதுடைய நபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

நேற்று வியாழக்கிழமை இரவு, கரடியனாறு பொலிஸாருக்குக் கிடைத்த இரகசியத் தகவலையடுத்து முன்னெடுக்கப்பட்ட விசேட சோதனையின் போதே இவர் கைது செய்யப்பட்டார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

சம்பவம் குறித்து மேலும் தெரிய வருவதாவது,

நேற்று இரவு 7.30 மணியளவில் பெருவெளி வயல் பகுதியிலுள்ள வாடி (கொட்டகை) ஒன்றைப் பொலிஸார் முற்றுகையிட்டனர். இதன்போது, அங்கு சட்டவிரோதமான முறையில் மறைத்து வைக்கப்பட்டிருந்த உள்ளூர் தயாரிப்பு துப்பாக்கியை மீட்டதுடன், அங்கிருந்த சித்தாண்டிப் பகுதியைச் சேர்ந்த 41 வயதுடைய விவசாயி ஒருவரையும் பொலிஸார் கைது செய்தனர்.

கைது செய்யப்பட்ட சந்தேகநபரை இன்று வெள்ளிக்கிழமை ஏறாவூர் நீதிவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பில் கரடியனாறு பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.



# போதைப்பொருள் கடத்தல்காரர்களுக்கு தண்டனை வழங்குவதை விரைவுபடுத்துக!

## அதிகாரிகளுக்கு ஜனாதிபதி கடும் எச்சரிக்கை



இலங்கையிலிருந்து போதைப் பொருள் அச்சுறுத்தலை முற்றாக ஒழிப்பதற்குத் தேவையான சட்டத் திருத்தங்கள் மற்றும் மறுசீரமைப்புகளை மிக விரைவாக முன்னெடுக்குமாறு ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க அதிகாரிகளுக்குக் கடும் உத்தரவு பிறப்பித்தார்.

ஜனாதிபதி அலுவலகத்தில் நேற்று வியாழக்கிழமை நடைபெற்ற "முழு நாடுமே ஒன்றாக" தேசிய செயற்பாட்டுச் சபையின் கூட்டத்திலேயே அவர் இதனை வலியுறுத்தினார்.

கைப்பற்றப்படும் போதைப்பொருள்கள் மீண்டும் எக்காரணம் கொண்டும் சமூகத்துக்குள் ஊடுருவுவதைத் தடுக்க வேண்டும் என்றும் ஜனாதிபதி எச்சரித்தார். அவற்றைச் சட்டபூர்வமான நடைமுறைகளின் கீழ் விரைவாக அழிப்பதற்கும், போதைப்பொருள் கடத்தல்காரர்களுக்குத் தண்டனை வழங்கும் செயற்பாடுகளைத் துரிதப்படுத்துவதற்கும் அவர் அறிவுறுத்தினார்.

"முழு நாடுமே ஒன்றாக" தேசிய செயற்பாடு ஆரம்பிக்கப்பட்ட 2025 அக்டோபர் 30 முதல் இதுவரை கிடைத்துள்ள முன்னேற்றங்கள் குறித்து கூட்டத்தில் ஆராயப்பட்டது. அதன் விவரங்கள் வருமாறு:-

* கைது செய்யப்பட்டவர்கள்: ஒரு இலட்சத்து 68 ஆயிரத்து 460 சந்தேக நபர்கள்.

* கைப்பற்றப்பட்டவை: சுமார் 5437 கிலோ கஞ்சா, 1936 கிலோ ஹெரோயின், 1991 கிலோ ஐஸ் போதைப்பொருள் மற்றும் 15 இலட்சத்திற்கும் அதிகமான போதை மாத்திரைகள்.

இந்தச் செயற்பாடு ஆரம்பிக்கப்பட்ட பின்னர் சுற்றிவளைப்புகள் 80 வீதத்தால் அதிகரித்துள்ளன என்றும் அதிகாரிகள் சுட்டிக்காட்டினர்.

தொடர்ச்சி ▼

# போதைப்பொருள் கடத்தல்காரர்களுக்கு தண்டனை வழங்குவதை விரைவுபடுத்துக!

தொடர்ச்சி ▲

போதைப்பொருளுக்கு அடிமையானவர்களை மீட்டெடுப்பதற்காக 2007ஆம் ஆண்டின் 54 ஆம் இலக்க புனர்வாழ்வு (திருத்த) சட்டமூலத்தை விரைவில் அமைச்சரவையில் சமர்ப்பிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. புனர்வாழ்வு பெற்றவர்கள் மீண்டும் போதைக்கு அடிமையாவதைத் தடுக்க சுயதொழில் பயிற்சிகள் மற்றும் மனப்பாங்கு அபிவிருத்தித் திட்டங்களை மத வழிபாட்டுத் தலங்களை மையப்படுத்தி முன்னெடுக்குமாறு ஜனாதிபதி கேட்டுக்கொண்டார்.

போதைப்பொருள் தொடர்பான வழக்குகளுக்காகத் தனியான நீதிமன்றத்தை நிறுவுதல் மற்றும் இரசாயனப் பகுப்பாய்வு அறிக்கைகளை விரைவாகப் பெற்று வழக்குத் தொடர்வதை துரிதப்படுத்துவது குறித்தும் இதன்போது விரிவாகக் கலந்துரையாடப்பட்டது. சிறைச்சாலை நெரிசலைத் தவிர்க்க போதைப்பொருள் குற்றவாளிகள் தொடர்பான சட்ட நடவடிக்கைகளை வேகப்படுத்துமாறும் அவர் குறிப்பிட்டார்.

பாடசாலை மாணவர்களை இலக்கு வைத்து முன்னெடுக்கப்படும் போதைப்பொருள் விநியோகத்தைத் தடுக்க கல்வி அமைச்சு மற்றும் மகளிர் பணியகம் இணைந்து விசேட திட்டங்களை முன்னெடுத்து வருவதாகவும், ஜூன் 26 சர்வதேச போதைப்பொருள் ஒழிப்பு தினத்தை முன்னிட்டு பாரிய விழிப்புணர்வுப் பணிகள் திட்டமிடப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.

இக்கூட்டத்தில் மகா சங்கத்தினர், மதத் தலைவர்கள், பாதுகாப்பு அமைச்சின் செயலாளர், முப்படைகளின் தளபதிகள் மற்றும் பொலிஸ் மா அதிபர் உள்ளிட்ட உயர்மட்ட அதிகாரிகள் பலரும் கலந்துகொண்டனர்.








# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்

259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


# வாரியார் பிரசங்கம்

"எமது வடக்கு மாகாணத்தைப் பொறுத்த வரை, 'காணாமல் ஆக்கப்பட்டவர்களின் விவகாரம்' என்பது வெறும் அரச திணைக் களங்களின் காகிதங்களில் உறங்கும் ஒரு சாதாரண கோப்புச் சார்ந்த விடயமல்ல. இது ஆயிரக்கணக்கான குடும்பங்களின் ஆறாத கண்ணீரோடும், பல தசாப்த கால ஏறுமாறான காத்திருப்போடும், விவரிக்க முடியாத வலியோடும் பின்னிப்பிணைந்த ஓர் அதிஉணர்வுபூர்வமான மனிதாபி மானப் பிரச்சினையாகும். அந்த உணர் வோடு அதை அணுக வேண்டும்." - என்று வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் தெரிவித்திருக்கின்றார். காணாமல்போன ஆள்கள் பற்றிய அலுவலகத்தால் நாட ளாவிய ரீதியில் முன்னெடுக்கப்படும் விழிப்புணர்வு வேலைத்திட்டம், வடக்கு மாகாண ஆளுநரின் தலைமையில் நேற்று வியாழக்கிழமை மாலை கிளிநொச்சி மாவட்ட செயலகத்தின் திறன் விருத்தி நிலையத்தில் நடைபெற்றது. இக்கூட்டத் தில் கலந்துகொண்டு விசேட அதிதியாக உரையாற்றும் போதே ஆளுநர் மேற்கண்ட வாறு குறிப்பிட்டிருக்கின்றார்.

வடக்கு ஆளுநர் பதவியில் இப்போது இருக்கின்ற நா.வேதநாயகன் இந்த மண்ணுக்குப் புதியவர் அல்லர். யுத்த காலத்தில் மக்களோடு மக்களாக இருந்து இந்த நெருக்கடிகளைத் தாமும் சேர்ந்து ஒரு பொதுமகனாகவும் அனுபவித்தவர்.

நாட்டில் - குறிப்பாக இலங்கை தீவின் வடக்கு, கிழக்கில் - தமிழர் தாயகத்தில் - பல்லாயிரக்கணக்கில் மக்கள் வலிந்து காணாமலாக்கப்பட்ட விவகாரம் பற்றிய முழு உணர்வு பூர்வமான கருத்து நிலைகள் அவருக்குத் தெரியும். அப்படிக் காணா மலாக்கப்பட்ட உறவுகளைத் தொலைத்து, அந்த வேதனையில் - மன வலியில் - தினம், தினம் அணு, அணுவாகச் செத்துக் கொண்டிருக்கும் மக்களின் உணர்வு நிலையை நன்கு அறிந்தவர். அந்த வேத னையின் தாற்பரியமும், பின்புலமும், காரண காரியங்களும் உணர்ந்தவர்.

அந்த உணர்வு நிலையைப் பரிதாபத்துக் குரியதாகப் பகிரங்கத்தில் பேசும் தகுதி நிலையில் இருந்து கொண்டு அவர் இவ் வாறு உணர்வுபூர்வமாக பேசுகின்றாரா என்பதுதான் கேள்வி.

யுத்தம் முடிந்து 17ஆண்டுகள் கடந்தும் கூட இந்த மக்களுக்கு நீதி செய்யப்பட முடியாமல் இருப்பதற்கு ஒரே காரணம் தென்னிலங்கை ஆட்சி பீடத்தில் அதி காரத்தில் இருக்கும் - இயல்பாகவே பௌத்த, சிங்களப் பேரினவாத மன வமைப்பிற்குள் நிரந்தரமாகச் சிக்கிக் கொண்டு, அதற்கு வெளியில் வர முடியாத தீவிர மேலாதிக்க நிலையில் இருக்கும் - அதிகார மையம்தான் என்பது அவருக் கும் நன்கு தெரியும். ஐயத்துக்கு அப்பால் புரியும்.

அந்த அதிகார மையத்தின் பிரதிநிதியாக இருந்து கொண்டு, இந்த மக்களின் காணாமல் போன உறவுகளின் வலி குறித்து பச்சாதாபப்படுவது போல மக்கள் முன் குரல் எழுப்புவது எவ்வளவு தூரம் அபத்தமானது, அற்பத்தனமானது, கொச் சைத்தனமானது, நடிப்புத்தனமானது என்பது அவருக்குத் தெரியாதது அல்ல. புரியாததுமல்ல.

ஒரு வகையில் அரசுத் தலைவரின் நேரடியான பிரதிநிதியாக இருந்து கொண்டு - உண்மைகள் வெளிப்படுத்தப் பட முடியாமல் மூடி மறைக்கப்பட்டு இருப்பதற்கு காரணமான அரச கட்ட மைப்பின் முகவராக இருந்து கொண்டு - அதையும் புரிந்து கொண்டு - அவர் இவ்வாறு அந்த மக்களுக்காகப் பச்சாதாபப் படுபவர் போல கருத்துக்களை வெளியி டுவதும், அதனை அவரது ஊடகப்பிரிவு ஊடாக மக்களுக்குப் பரப்புவதும் காணா மல் போன உறவுகளின் மனவலியோடு விளையாடும் கொச்சைத்தனமாகும். இந்தத் 'தில்லாலங்கடி' வேலை இனியும் வேண்டாம்.

சிங்கள ஆட்சித் தலைமையின் முகவர் என்ற முறையில் அதிகார இலாகனைக் கையில் வைத்துக்கொண்டு, பல்வேறு விடயங்களில் கிருபானந்த வாரியார் போல அவர் தினசரி கதாப் பிரசங்கம் செய்வதை - அறிவுரை கூறுகின்றமையை - நாம் கேட்டு வருகிறோம். தேர்ந்த - முதிர்ந்த - நேர்மையான - முன்னாள் அதிகாரி என்ற முறையில் அவற்றை அவர் செய்வதைத் தவறு என்று கூற முடியாது. மறுவளத்தில் அப்படி வழிகாட்டுதல்களை வழங்கும் தகுதியுடையவராக அவர் இருக்கிறார் என்பதையும் ஒப்புக்கொள் கிறோம்.

ஆனால், அதற்காக, தமிழ்த் தேசிய இனத்தின் மன வலி நிறைந்த உணர்வுபூர்வ விடயத்தில் சிங்களத்தின் பிரதிநிதியாக இருந்து கொண்டு, அதே கதாப் பிரசங் கத்தைத் தாம் நடத்தக்கூடாது என்பது மற்றவர்களை விட அவருக்கு நன்கு தெரியும் என்று கருதுகிறோம். அத்தகைய போக்கை அவர் தவிர்த்துக் கொள்வது நல்லது.

சாத்தான் தரப்பில் இருந்து கொண்டு வேதம் ஓத முயல்வது தப்பு.



# ஹோ சி மின் உருவச்சிலைக்கு வியட்நாம் ஜனாதிபதி மலரஞ்சலி!

ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவின் அழைப்பின் பேரில் இலங்கைக்கு உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொண்டுள்ள வியட்நாம் சோசலிசக் குடியரசின் ஜனாதிபதியும் வியட்நாம் கம்யூனிஸ்ட் கட்சியின் மத்திய குழுவின் பொதுச்செயலாளருமான டோ லாம் இன்று முற்பகல் கொழும்பு பொது நூலக வளாகத்தில் அமைந்துள்ள ஹோ சி மின் உருவச் சிலைக்கு மலரஞ்சலி செலுத்தினார்.

கொழும்பு பொது நூலகத்துக்கு வருகை தந்த வியட்நாம் ஜனாதிபதி டோ லாமை, ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க அமோகமாக வரவேற்றதுடன், இதன்போது, இரு நாடுகளினதும் தேசியக்கொடிகளை ஏந்தியவாறு வீதியின் இருமருங்கிலும் நின்றிருந்த சிறுவர்கள், வியட்நாம் ஜனாதிபதிக்குத் தமது மரியாதையைச் செலுத்தினர்.

ஹோ சி மின் உருவச்சிலைக்கு மலரஞ்சலி செலுத்திய வியட்நாம் ஜனாதிபதிக்கு, பாடசாலை மாணவர்களால் வரையப்பட்ட ஓவியங்களும் இங்கு கையளிக்கப்பட்டன.

இதனைத் தொடர்ந்து, கொழும்பு பொது நூலகத்தில் அமைந்துள்ள ”வியட்நாம் – ஹோ சி மின் வளாகத்தை” விரிவாக்கம் செய்யும் பணிகளை ஆரம்பித்து வைக்கும் நிகழ்வில் கலந்துகொண்ட வியட்நாம் ஜனாதிபதி, அங்கிருந்த வரலாற்றுச் சிறப்புமிக்க புகைப்படத் தொகுப்பைப் பார்வையிட்டார். இதன்போது, பொது நூலகத்தின் பிரதம நூலகர் வருணி கங்கபடஆரச்சியினால், ஹோ சி மின் வளாகத்தை நவீனமயப்படுத்துதல் மற்றும் விரிவாக்கம் செய்யும் திட்டத்திற்காகத் தயாரிக்கப்பட்ட கட்டடக் கலை வடிவமைப்புகள் குறித்து விளக்கமளிக்கப்பட்டதுடன், இதற்காக வியட்நாமின் கணக்காய்வாளர் நாயகம் நெகுயென் ஹூ ன்கியா, கொழும்பு மேயர் வ்ராய் கெலி பல்தசாரிடம் 5 ஆயிரம் அமெரிக்க டொலர்களை நன்கொடையாக வழங்கினார்.

சுற்றாடல் அமைச்சர் வைத்தியர் கலாநிதி தம்மிக்க படபெந்தி, கொழும்பு மேயர் வ்ராய் கெலி பல்தசார், பிரதி மேயர் ஹேமந்த வீரகோன் உள்ளிட்டோர் இந்த நிகழ்வில் கலந்துகொண்டனர்.















# அடிப்படைத் தேவைகள்: வாழ்வாதாரப் போராட்டமும் சாமானியனின் நிதர்சன நிலையும்

**ஆதம்பாவா பாத்திமா சாஜிதா,**
**மூன்றாம் வருடம்,**
**ஊடகக் கற்கைகள் துறை,**
**யாழ். பல்கலைக்கழகம்.**

மனித நாகரிகம் எவ்வளவுதான் வளர்ச்சி அடைந்தாலும் ஒரு மனிதன் கௌரவமாக வாழ்வதற்குத் தேவையான அடிப்படைத் தேவைகள் மாறாதவை. அவை ஒவ்வொருவருக்கும் வெவ்வேறானவை. இதற்கென வாழ்நாள் முழுக்க ஒவ்வொரு மனிதனும் உழைக்கிறான். உணவு, உடை, இருப்பிடம் என்பன பாரம்பரியமாகச் சொல்லப்பட்டாலும், இன்றைய காலக்கட்டத்தில் கல்வி மற்றும் சுகாதாரம் ஆகியவையும் அத்தியாவசியத் தேவைகளாக உருவெடுத்துள்ளன. இவை கிடைக்காதபோது ஒரு மனிதனின் வாழ்க்கை, வாழ்நாள் போராட்டமாக மாறுகிறது.

### அடிப்படைத் தேவைகளின் வகைப்பாடு

ஒரு மனிதன் உயிர்வாழவும் சமூகத்தில் இயல்பாக இயங்கவும் இன்றியமையாதவையாக அடிப்படைத் தேவைகள் காணப்படுகின்றன. உடலியல் இயக்கத்துக்கான எரிபொருளாக உணவும் நீரும், பாதுகாப்பு மற்றும் தற்காப்புக்கான கவசமாக இருப்பிடம் மற்றும் உடை, நோயற்ற வாழ்வை உறுதி செய்யும் காரணியாக சுகாதாரம், சமூகப் பொருளாதார நிலையில் முன்னேற்ற உதவும் ஏணியாக கல்வி என தேவைகள் குவிந்து காணப்படுகின்றன.

### வாழ்வின் மீதான தாக்கங்கள்

ஒரு ஆழமான பார்வையில் நோக்கும் போது அடிப்படைத் தேவைகள் வேறு விதமாகவும் தென்படும். அவை பூர்த்தி செய்யப்படாத போது அது ஒரு தனிமனிதன் மீது மட்டுமல்லாது முழுச் சமூகத்தின் மீதும் கடுமையான தாக்கத்தை ஏற்படுத்துகிறது. சுதந்திர இலங்கையில் வாழ்ந்தும் சொந்த வீட்டில் பயத்துடன் வாழும் வாழ்க்கை, வீடிருந்தும் வாடகை வீடுகள், பயிர் செய்ய நிலமிருந்தும் மறுக்கப்படும் காணிகள், படித்து பட்டமிருந்தும் வேலையில்லா திண்டாட்டம், உழைக்க உடல் வலிமை இருந்தும் புறக்கணிப்புகள் மற்றும் தகுதி இருந்தும் பின்வாங்குதல்கள் என ஒவ்வொருவரது தேவைகளும் ஏதோ ஒன்றை நிவர்த்தி செய்ய வேண்டியவையாகவும், நிறைவேற்றப்பட வேண்டியவையாகவும் காணப்படுகின்றன.

சத்தான உணவு கிடைக்காதபோது நோயெதிர்ப்பு சக்தி குறைந்து உடல் நலிவடைகிறது. அதேபோல், அடுத்த வேளை உணவுக்கு என்ன செய்வது என்ற கவலை ஒரு மனிதனைத் தொடர்ச்சியான மன அழுத்தத்துக்கு உள்ளாக்குகிறது.

இது ஒருவரின் சிந்திக்கும் திறனைக் குறைத்து அவரை நம்பிக்கையற்ற நிலைக்குத் தள்ளுகிறது. முறையான இருப்பிடம் இல்லாதவர்கள் வீதியோரங்களிலும், பாதுகாப்பற்ற குடிசைகளிலும் வாழ வேண்டியுள்ளது. இது குறிப்பாகப் பெண்கள் மற்றும் குழந்தைகளின் பாதுகாப்பைக் கேள்விக்குறியாக்குகிறது. ஏழ்மையின் காரணமாக ஒரு தலைமுறை கல்வியைத் தவறவிடும்போது, அடுத்த தலைமுறையும் அதே வறுமைச் சுழல் (Poverty Trap)இல் சிக்கிக்கொள்கிறது. இது சமூக ஏற்றத்தாழ்வை மேலும் அதிகப்படுத்துகிறது.

### அடிப்படைத் தேவைகளுக்காக மக்கள் படும் அன்றாடப் பாடுகள்

ஒவ்வொரு விடியலும் ஒரு சாமானியனுக்குப் புதிய வாய்ப்பாக அமைவதில்லை. மாறாக அது ஒரு புதிய போராட்டத்தின் தொடக்கமாகவே அமைகிறது. அதிகாலையிலேயே வேலையைத் தேடிச் செல்லும் கூலித் தொழிலாளர்கள், அந்த நாள் முழுவதும் உழைத்தால் மட்டுமே இரவு அடுப்பு எரியும் என்ற நிலையில் உள்ளனர். விலைவாசி உயர்வு அவர்களுக்குக் கிடைக்கும் சொற்பக் கூலியைச் சாப்பாட்டுக்கே செலவிட வைக்கிறது. பல பகுதிகளில் ஒரு குடம் குடி தண்ணீரைப் பெறுவதற்காகப் பெண்கள் பல கிலோ மீற்றர் நடப்பதையும், நீண்ட வரிசையில் பல மணிநேரம் காத்திருப்பதையும் இன்றும் காண்கிறோம். இது அவர்களின் நேரத்தையும் உழைப்பையும் உறிஞ்சுகிறது.

அரச மருத்துவமனைகளில் நீண்ட வரிசையில் காத்திருப்பதும், தனியார் மருத்துவமனைக்குச் செல்லப் பணம் இல்லாததும் ஏழை மக்களின் பெரும் அவலமாகும். ஒரு சிறிய அறுவைச்

தொடர்ச்சி ▼

# வாழ்வாதாரப் போராட்டமும் சாமானியனின் நிதர்சன நிலையும்

**தொடர்ச்சி ▲**

சிகிச்சைக்காகத் தனது வாழ்நாள் சேமிப்பையே இழக்கும் அல்லது கடன் சுமையில் மூழ்கும் குடும்பங்கள் ஏராளம்.

மழைக்காலங்களிலும், கடுங்குளிர் காலங்களிலும் வீடற்ற மக்கள் படும் அவதி சொல்லொணாதது. பிளாட்பாரங்களிலும், வீதியோரங்களிலும் உறங்கும் மக்கள் ஒவ்வொரு இரவையும் பயத்துடனேயே கழிக்கின்றனர்.

அடிப்படைத் தேவைகள் என்பது ஒரு சலுகை அல்ல. அது ஒவ்வொரு குடிமகனின் உரிமை. அரசின் நலத் திட்டங்கள் தகுதியுடைய நபர்களுக்குச் சரியாகச் சென்றடைவதை உறுதி செய்ய வேண்டும். அதேபோல் வசதி படைத்தவர்கள் சமூகப் பொறுப்புணர்வுடன் இயன்ற உதவிகளைச் செய்வது வறுமையின் தாக்கத்தைக் குறைக்க உதவும்.

அடிப்படைத் தேவைகளுக்காக ஒரு மனிதன் தன் வாழ்நாள் முழுவதையும் செலவிட நேர்ந்தால் அவனால் கலை, இலக்கியம் மற்றும் அறிவியல் போன்ற உயர் சிந்தனைகளில் ஈடுபட முடியாது. ஒரு நாடு வல்லரசாவதை விட அங்குள்ள ஒவ்வொரு குடிமகனும் பசியின்றியும் பாதுகாப்பான கூரையின் கீழும் வாழ்வதை உறுதி செய்வதே அந்த நாட்டின் உண்மையான வெற்றியாகும். ■



# பாலத்துக்குப் பாதுகாப்பு வேலி அமைக்குமாறு மக்கள் கோரிக்கை

**(மஸ்கெலியா நிருபர்)**

அம்பகமு பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள கலவல்தெனியா செல்லும் பிரதான வீதியில் பிரிட்ஜ் நகரத்துக்குச் செல்லும் பகுதியில் பாலம் ஒன்றில் பாதுகாப்புவேலி இல்லாத காரணத்தால் கலவெல்தெனியா பாடசாலைக்கு செல்லும் மாணவர்கள் பெரும் சிரமம் அடைகின்றனர்.

இது குறித்து அம்பகமுவ பிரதேச செயலாளர் மற்றும் அம்பகமு பிரதேச சபையின் தவிசாளர், சபையின் பிரதிநிதிகள் சம்பந்தப்பட்ட வீதி அபிவிருத்தி அதிகார சபையின் அதிகாரிகளுக்கும் உடன் கவனம் செலுத்த வேண்டும் என கோரிக்கை விடுக்கின்றனர்.

# வருடக்கணக்கில் கவனிப்பாரற்றுக் காணப்படும் முட்கொம்பன் – நேரடம்பன் வீதியைத் திருத்துக!

**(த.சுபேசன்)**



பூநகரிப் பிரதேச சபை எல்லைக்கு உட்பட்ட முட்கொம்பன் – நேரடம்பன் வீதியை புனரமைத்துத் தருமாறு பிரதேச மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

முட்கொம்பன் வீதியில் இருந்து நேரடம்பன் பகுதிக்குச் செல்லும் சுமார் மூன்று கிலோமீட்டர் நீளமான மேற்படி வீதியானது இதுவரை தார் வீதியாக புனரமைப்புச் செய்யப்படாமல் காணப்படுகின்றது.

இதனால் அங்கு வசிக்கும் பொதுமக்கள் மாரி காலத்தில் பெரும் சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

குறிப்பாக பாடசாலை மாணவர்கள் மற்றும் விவசாயிகள் பெரிதும் பாதிப்படைகின்றனர்.

இந்த வீதியின் இருமருங்கும் வாய்க்கால் காணப்படுகின்ற நிலையில் அது நிறைந்து வீதியால் பயணிக்க முடியாத நிலைமை ஒவ்வொரு மாரி காலமும் ஏற்படுகிறது.

எனவே வீதியினுடைய மதவுகளை சீர்செய்து வீதியையும் புனரமைத்துத் தருமாறு அப்பகுதி மக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

இந்த வீதியானது சீரின்மையால் கிராம மக்கள் அவசர தேவைக்கு வைத்தியசாலைக்கு செல்வதற்கு கூட நீண்ட நேரம் செலவிட வேண்டி ஏற்படுகிறது என்றும் பொது மக்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.




# வடக்கு மக்களின் கல்வித் தேடலுக்கு வலுச் சேர்க்கும் “Study In யாழ்ப்பாணம்”

**(எஸ்.நிதர்ஷன்)**

வடக்கின் மாணவர்களை சர்வதேச பல்கலைக் கழகங்களுடன் நேரடியாக இணைக்கும் நோக்கில் உருவாக்கப்பட்ட “Study In யாழ்ப்பாணம்” கல்வி நிறுவனத்தின் பிரமாண்ட திறப்பு விழா இன்று யாழ்ப்பாணம் வேம்படிச் சந்தியில் அமைந்துள்ள குறித்த நிறுவன வளாகத்தில் பிரமாண்டமாக நடைபெற்றது.

வடமாகாண ஆளுநர் நா.வேதநாயகன் மற்றும் யாழ்.மாவட்ட அரச அதிபர் ம. பிரதீபன் ஆகியோர் பிரதம அதிதிகளாகக் கலந்துகொண்டு நாடா வெட்டி நிறுவனத்தின் செயற்பாடுகளைச் சம்பிரதாய பூர்வமாக ஆரம்பித்து வைத்தனர்.

“கற்க மறுப்பவர் வாழ மறுப்பவர்” எனும் பழந் தமிழ் வாசகத்துக்கு இணங்க, வடக்கு மக்களின் கல்வித் தேடலுக்கு வலுசேர்க்கும் நோக்குடன் குறித்த நிறுவனம் யாழில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

வடபகுதியில் ஆளுமைமிக்க மாணவர்கள் இருந்தும், அரச பல்கலைக் கழகங்களில் நுழைவதற்கான வாய்ப்பு கிடைக்காத மாணவர்களுக்கு, சர்வதேச ரீதியில் உயர்கல்வியைத் தொடர இதுவொரு சிறந்த அடித்தளமாக அமையும் என நிறுவனத்தின் பணிப்பாளர் சபை நம்பிக்கை வெளியிட்டுள்ளது.

இந்த நிகழ்வில் சிவபூமி அறக்கட்டளையின் ஸ்தாபகர் கலாநிதி ஆறு திருமுருகன், யாழ். மறை மாவட்டத்தை சேர்ந்த ஜெறோம் செல்வநாயகம் , யாழ். மாநகர முதலவர் மதிவதனி விவேகானந்தராஜா, கோப்பாய் ஆசிரியர் பயிற்சி கலாசாலை அதிபர் சந்திரமௌலி லலீசன், “Study In யாழ்ப்பாணம்” கல்வி நிறுவனத்தின் பணிப்பளார்களான ரிஷ்வான், ரிஸ்மி, செயல்பாட்டு தலைவர் ஜயாத்துரை கஜமுகன் உள்ளிட்ட பல முக்கிய பிரமுகர்கள் கலந்துகொண்டனர்.

முன்னதாக, விழாவுக்கு வருகை தந்த அதிதிகள் அனைவரும் மங்கள்வாத்தியங்கள் முழங்க, மாலை அணிவித்து கௌரவிக்கப்பட்டு விழா மேடைக்கு அழைத்து வரப்பட்டனர்.

இக்கல்வி நிறுவனம் வடபகுதி மாணவர்களின் கல்வித் தரத்தை சர்வதேச மட்டத்துக்கு உயர்த்துவதில் முக்கிய பங்காற்றும் என இதன்போது உரையாற்றிய விருந்தினர்கள் நம்பிக்கை வெளியிட்டனர்.


















# சாய்ந்தமருது கலாசார அதிகார சபையின் 2026 ஆம் ஆண்டுக்கான நிர்வாகம் தெரிவு

(எம்.எஸ்.எம்.ஸாகிர்)

சாய்ந்தமருது பிரதேச கலாசார அதிகார சபையின் 2026 ஆம் ஆண்டுக்கான புதிய நிர்வாக சபைத் தெரிவு கலாசார உத்தியோகத்தர் றஸ்மி மூசா நெறிப்படுத்தலில் பிரதேச செயலாளரும் கலாசார அதிகார சபையின் நிர்வாக தலைவருமான எம்.எம்.ஆசிக் தலைமையில் சாய்ந்தமருது பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் நேற்று வியாழக்கிழமை இடம்பெற்றது.

கலாசார சபையின் நிர்வாகத் தலைவராக சாய்ந்தமருது பிரதேச செயலாளர் எம்.எம். ஆசிக், ஒருங்கிணைப்பாளராக கலாசார உத்தியோகத்தர் றஸ்மி மூசா, கலாசார அதிகார சபையின் தலைவராக அஸ்வான் சக்காப் மௌலானா, செயலாளராக ஓய்வு பெற்ற கலாசார உத்தியோகத்தர் எம்.ஐ. அஷ்றப், உபதலைவராக ஊடகவியலாளர் யூ.எல். நூறுல் ஹுதா, உப செயலாளராக எம்.ஐ.எப். சஜினா ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர்.

அத்துடன் செயற்குழு உறுப்பினர்களாக கலைஞர்களான யூ.எல். ஆதம் பாவா, பல்துறை கலைஞர் என்.எம். அலிக்கான், ஊடகவியலாளரும் பல்துறைக் கலைஞருமான எம்.எஸ்.எம். ஸாகிர், எம்.ஏ. பஸ்லியா, எம்.ஆர். பானு, எஸ். முர்சிதா, எம்.ஏ.சீ.எம். பாயிஸ்கரீம், ஏ.எல்.எம்.முஸ்தக், எம்.ஐ.எம். றியாஸ், எம்.சீ.ஏ. சாஹிர் கரீம், எம்.ஏ.சீ.எஸ். ஜெலீனா, ஐ. ஜாபிர் ஆகியோர் செயற்குழு உறுப்பினர்களாகவும் ஏக மனதாகத் தெரிவு செய்யப்பட்டனர்.

# காணி சமபங்கு வேண்டும் ஆய்வு நூல் வெளியீடு!





(பாறுக் ஷிஹான்)

நிந்தவூர் பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் நிந்தவூர் பிரதேச செயலாளர் சட்டத்தரணி ஏ. எம்.அப்துல் லத்தீப் தலைமையில் நிந்தவூர் மத்தியஸ்த சபைக்கு புதிதாக நியமிக்கப்பட்டுள்ள மத்தியஸ்தர்களுக்கான நியமன கடிதங்கள் கடந்த புதன்கிழமை வழங்கி வைக்கப்பட்டது.

இந்த நிகழ்வில் 'அம்பாறை மாவட்டம் காணி சமபங்கு வேண்டும்' எனும் தொனிப் பொருளில் ஆய்வு நூல் ஒன்றும் வெளியீடு செய்யப்பட்டது.

அம்பாறை மாவட்டத்தில் நில உரிமை மற்றும் காணி சமபங்கு குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்தும் நோக்கில் சட்டத்தரணி ஆஷிக் அலியார் மற்றும் சட்டத்தரணி சர்ஜ/ன் ஜமால்தீன் இணைந்து எழுதிய 'அம்பாறை மாவட்டம் காணி சமபங்கு வேண்டும்' எனும் தொனிப் பொருளில் ஆய்வு நூல் எழுதப்பட்டது.

இந்தநூல் அம்பாறை மாவட்டத்தில் நில உரிமை, காணி சமபங்கு, முஸ்லிம் – சிங்கள மற்றும் தமிழ் கிராமங்களில் காணி ஒதுக்கீட்டில் நிலவும் பிரச்சினைகள், வரலாற்றுப் பின்னணி, மற்றும் தீர்வுக்கான பரிந்துரைகள் குறித்து ஆழமான ஆய்வாக எழுதப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.



# ஆசிரிய நண்பர்களின் சங்கமம் மட்டக்களப்பில்

**(செல்லையா பேரின்பராசா)**

மட்டக்களப்பு அரசினர் ஆசிரிய பயிற்சி கலாசாலையில் 1990ஃ1991 ஆம் கல்வியாண்டில் பயின்ற ஆசிரிய மாணவர்களின் ஒன்றுகூடல் நிகழ்வு மட்டக்களப்பு வாடி வீட்டு விருந்தினர் மண்டபத்தில் நாளை சனிக்கிழமை காலை 10 மணிக்கு இடம்பெறவுள்ளது.

இந்த நிகழ்வில் திருகோணமலை, மட்டக்களப்பு, அம்பாறை, யாழ்ப்பாணம், பதுளை, நுவரெலியா, கொழும்பு உள்ளிட்ட மாவட்டங்களில் இருந்து வந்து ஆசிரிய பயிற்சி பெற்று வெளியேறி கல்விப் புலத்தில் பல்வேறுபட்ட பதவிகளை வகித்து அரச சேவையில் இருந்து ஓய்வு பெற்றவர்களும் தற்சமயம் அரசசேவையில் உள்ளவர்களும் சங்கமிக்கவுள்ளனர்.

இறை பிரார்த்தனைகளுடன் ஆரம்பமாகும் இந்த நிகழ்வில் அன்றைய காலத்தில் இக்கலாசாலையின் அதிபராகவிருந்த வ.கனகசிங்கம், பிரதி அதிபராகவிருந்த மு.பரஞ்சோதி, விரிவுரையாளராகவிருந்த பாஸ்கரன் மற்றும் பதினெட்டு ஆசிரிய நண்பர்களுக்கான அஞ்சலியும் இடம்பெறவுள்ளது.

பல்வேறுபட்ட கலை நிகழ்வுகளும் இடம்பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.



# அடம்பன் பாடசாலையின் பவள விழாவையொட்டி முன்னிட்டு கிரிக்கெட் சுற்றுப் போட்டிக்கு ஏற்பாடு

(வாஸ் கூஞ்ஞ)

மன்னார் மாவட்டத்தின் பல்துறைகளில் புகழ்பெற்ற பாடசாலையான மன்னார் அடம்பன் மத்திய மகா வித்தியாலயத்தின் 75 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு பவள விழா நிகழ்வுகளை நடத்த இப்பாடசாலை நிர்வாகம் திட்டமிட்டுள்ளது.

அதனை முன்னிட்டு பழைய மாணவர்களை ஒன்றிணைக்கும் நோக்கில் மாபெரும் பழைய மாணவர் கிரிக்கெட் சுற்றுப் போட்டியை நடத்துவதற்கான ஏற்பாடுகளும் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

அடம்பன் மத்திய மகா வித்தியாலயத்தின் 75 ஆண்டு கால கல்விப் பயணத்தைச் சிறப்பிக்கும் பவள விழா நிகழ்வுகளின் ஒரு அங்கமாக பழைய மாணவர்களை ஒன்றிணைக்கும் மாபெரும் சுற்றுப் போட்டி நடத்தப்படவுள்ளது.

நாளை சனிக்கிழமை இப்பாடசாலை மைதானத்தில் காலை 09 மணிக்கு போட்டிகள் ஆரம்பமாகவுள்ளன.

இதில் பிரதம விருந்தினராக இப்பாடசாலையின் பழைய மாணவர் நாகேஸ் உருத்திர மூர்த்தியும் சிறப்பு விருந்தினர்களாக பழைய மாணவர்களான சமூக செயற்பாட்டாளர் மயில்வாகனம் சூரியபுத்திரன், நமசிவாயம் ஜீவகுமார் மற்றும் பிரபல வர்த்தகர் முகம்மது ஹனீபா முகம்மது தௌபீக் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

இந்த போட்டியில் பல ஆண்டுகளைச் சேர்ந்த பழைய மாணவர்கள் அணிகளாக கலந்து தங்கள் நட்பு– ஒற்றுமை மற்றும் பாடசாலையின் மீதான பாசத்தை வெளிப்படுத்தவுள்ளனர். மேலும் பவள விழா கொண்டாட்டங்களுக்கான முன்னோட்ட நிகழ்வாகவே இது அமைகின்றது என தெரிவிக்கப்படுகிறது.



# கல்முனையில் இலக்கிய சந்திப்பு

கல்முனை எழுத்தாளர் ஒருங்கிணைப்பு மையத்தின் ஏற்பாட்டில், இலக்கியச் சந்திப்பொன்று கல்முனை நெற் ஊடக வலையமைப்பின் தலைமை அலுவலகத்தில் நேற்று நடைபெற்றது.

இந்த இலக்கியச் சந்திப்பில், கல்முனைப் பிராந்தியத்தைச் சேர்ந்த கலைஞர்களான வைரமுத்து கணேசன் (சேனைக்குடியிருப்பு), சதானந்தம் ரகுவரன் (கோட்டைக்கல்லாறு), சண்முகம் சுந்தரராஜன் (சேனைக்குடியிருப்பு) ஆகியோர் தத்தமது காத்திரமான இலக்கிய அனுபவப் பகிர்வுகளை பகிர்ந்தனர்.

இலக்கியச் சந்திப்புக்குச் சிரேஷ்ட ஊடகவியலாளரும் ஓய்வு நிலை உதவிக் கல்விப் பணிப்பாளருமான வித்தகர் விபுலமாமணி வி.ரி.சகாதேவராஜா தலைமை வகித்தார்.

எழுத்தாளர் ஒருங்கிணைப்பு மைய ஸ்தாபகர் புவி.கேதீஸ்ஸின் வழிகாட்டலில், செயலாளர் கே.சாந்தகுமார், பொருளாளர் என்.அருளானந்தம், திட்டமிடல் பணிப்பாளர் ப.சந்திரமோகன் ஆகியோர் ஒருங்கிணைப்பை மேற்கொண்டனர்.

# சந்நிதியான் ஆச்சிரமத்தின் வாராந்த நிகழ்வாக தெய்வீக இசை அரங்கம்






சந்நிதியான் ஆச்சிரம சைவகலைப் பண்பாட்டு பேரவையின் ஆச்சிரம முதல்வர் சாதனைத் தமிழன் கலாநிதி மோகனதாஸ் சுவாமிகள் தலைமையில் இன்று வித்துவான் க.கிருபாகரராஜாவின் பக்தி பாடல்கள் இடம்பெற்றன.

ஒகன்– கதிர்காம அழகன் , தபேலா – ம.பிரபா ஆகிய கலைஞர்களுடன் பக்திப் பாடல்கள் இசைக்கப்பட்டன.

# பரு. மீன் சந்தை வியாபாரிகளின் பிரச்சினை தொடர்பில் கலந்தாய்வு





(பூ.லின்ரன்)

பருத்தித்துறை மீன் சந்தை வியாபாரிகளின் பிரச்சினைகளுக்கு தீர்வு காண்பது தொடர்பில் விசேட கலந்துரையாடல் இடம்பெற்றது.

பருத்தித்துறை மீன் சந்தை வியாபாரிகள் எதிர்கொள்ளும் பல்வேறு சவால்கள் மற்றும் சந்தை நிர்வாகம் தொடர்பான விசேட கலந்துரையாடல் இன்று வெள்ளிக்கிழமை காலை 10:30 மணியளவில் பருத்தித்துறை நகர சபையில் நடைபெற்றது.

இந்தக் கூட்டத்தில் பருத்தித்துறை நகர சபையின் தவிசாளர், செயலாளர் மற்றும் நகர சபை உறுப்பினர்கள் கலந்து கொண்டனர். மீன் சந்தை வியாபாரிகள் சார்பில் பெரும் எண்ணிக்கையிலானோர் பங்கேற்று தமது கோரிக்கைகளை முன்வைத்தனர்.

கலந்துரையாடலின் போது, வியாபாரிகள் தாம் நீண்டகாலமாக எதிர்நோக்கி வரும் பல்வேறு நடைமுறைச் சிக்கல்கள் மற்றும் வியாபாரிகளுக்கு மீனை பாதுகாப்பான முறையில் வைப்பதற்கான கூலரின் தேவை தொடர்பாக அதிகாரிகள் முன்னிலையில் விவரித்தனர்.

சந்தையின் உட்கட்டமைப்பு வசதிகள் தொடர்பான குறைபாடுகள், தினசரி வியாபாரத்தின் போது எதிர்கொள்ளும் நிர்வாக ரீதியான நெருக்கடிகள், சுகாதார மற்றும் கழிவு முகாமைத்துவத்தில் உள்ள சவால்கள். தொடர்பாகவும் கலந்துரையாடப்பட்டது.

வியாபாரிகளின் கருத்துக்களைக் கேட்டறிந்த தவிசாளர் மற்றும் செயலாளர், அவற்றுக்கான உடனடி மற்றும் நீண்டகால தீர்வுகள் குறித்து விரிவாக ஆலோசித்தனர்.

"வியாபாரிகளின் நியாயமான கோரிக்கைகள் பரிசீலிக்கப்பட்டு, சந்தை நடவடிக்கைகளை முறைப்படுத்தவும், பிரச்சினைகளைத் தீர்க்கவும் தகுந்த நடவடிக்கைகள் எடுக்கப்படும் என நகர சபை தரப்பில் உறுதி அளிக்கப்பட்டது.

இதனைத் தொடர்ந்து, சந்தை நடவடிக்கைகளை எவ்வாறு செம்மையாகக் கட்டுப்படுத்துவது மற்றும் எதிர்காலத்தில் இவ்வாறான சிக்கல்கள் எழாமல் தவிர்ப்பது குறித்த முக்கிய தீர்மானங்கள் கூட்டத்தின் இறுதியில் எடுக்கப்பட்டன.





# மண்முனைப் பற்றில் நடைபெற்ற கவிதைகளோடு பேசுவோம் நிகழ்வு

(ஜதுர்சயன்)

மண்முனைப் பற்றில் கவிதைகளோடு பேசுவோம் எனும் நிகழ்வு நடைபெற்றது.

மண்முனைப்பற்று பிரதேச செயலகம், பிரதேச கலாசார பேரவை மற்றும் பிரதேச கலாசார அதிகார சபை இணைந்து நடத்திய கவிதைகளோடு பேசுவோம் எனும் நிகழ்வு நேற்று வியாழக்கிழமை பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது.

கலாசார பேரவை உப தலைவரும், உதவிப் பிரதேச செயலாளருமான கி.இளம்குமுதன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வுக்குப் பிரதம அதிதியாக பிரதேச கலாசார அதிகார சபையின் நிறைவேற்று தலைவரும், பிரதேச செயலாளருமான தெட்சண கௌரி தினேஷ் கலந்து கொண்டார்.

இதன்போது இந்த நிகழ்வில் கிழக்கு மாகாண பண்பாட்டு அலுவல்கள் திணைக்களத்தின் முன்னாள் பணிப்பாளர் சரவணமுத்து நவநீதன், கவிஞர் த.கோபாலகிருஸ்ணன், ஏனைய கவிஞர்கள், கலைஞர்கள், இலக்கியவாதிகள் என பாலர் கலந்து கொண்டிருந்தனர்.

இந்நிகழ்வில் மறைந்த கலைஞர்களின் உருவப் படங்களுக்கு மலரஞ்சலி செலுத்தி நினைவு கூரப்பட்டதைத் தொடர்ந்து மண்முனைப்பற்று கலைஞர் மற்றும் கவிஞர்களின் ஆக்கங்களாக வெளிவந்த புத்தகக் கண்காட்சிகூடம் திறந்து வைக்கப்பட்டது.

கவியரங்கம் இடம்பெற்று மூத்த கலைஞர்கள் மற்றும் கவிஞர்கள் கௌரவிக்கப்பட்டனர்.



# ட்ரம்பின் உலகளாவிய வரிவிதிப்பு நியாயமற்றது என நீதிமன்று தீர்ப்பு!

அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்பால் அண்மையில் விதிக்கப்பட்ட 10% தற்காலிக உலகளாவிய வரிகள் நியாயமற்றவை என அமெரிக்க வர்த்தக நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.

இதனால் அமெரிக்க ஜனாதிபதியின் இறக்குமதி வரி உத்திக்கு அமெரிக்க மற்றொரு பின்னடைவு ஏற்பட்டுள்ளது என்று சர்வதேச ஊடகங்கள் தெரிவித்துள்ளன.

1970 களின் வர்த்தகச் சட்டத்தின் கீழ், அவர் அண்மையில் விதித்த 10% தற்காலிக உலகளாவிய வரிகள் நியாயமற்றவை என்று நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.

எனினும் இதன் பலன் இரண்டு தனியார் இறக்குமதியாளர்களுக்கும் மற்றும் வொஷிங்டன் மாகாணத்துக்கும் மட்டுமே பொருந்தும் என நீதிமன்றம் தடுத்துள்ளது.

அமெரிக்க சர்வதேச வர்த்தக நீதிமன்றத்தின் 2-1 என்ற அடிப்படையிலான இந்தத் தீர்ப்பு, ட்ரம்ப் நிர்வாகத்தின் மேல்முறையீட்டு நடவடிக்கைகள் முடியும்வரை அனைத்து இறக்குமதியாளர்களுக்கும் இந்தத் தற்காலிக வரிகள் தொடரும் என்பதை உறுதிப்படுத்துகிறது.

இந்த வரிகள் ஜூலை மாதத்தில் காலாவதியாகும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. ஏறக்குறைய இரண்டு மாதங்களில் காலாவதியாகவுள்ள வரிகளுக்கு இந்தத் தீர்ப்பு பொருந்தினாலும், ட்ரம்பின் உலகளாவிய வரி இலட்சியங்களுக்கு இது மற்றொரு பெரிய பின்னடைவாகக் கருதப்படுகிறது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

# ஈரான் கையெழுத்திடாவிட்டால் ஆக்ரோஷமாகத் தாக்குவோம்!



ஈரான் ஒப்பந்தத்தில் கையெழுத்திடாவிட்டால், எதிர்காலத்தில் இன்னும் கடினமாகவும், ஆக்ரோஷமாகவும் தாக்குதலை நடத்துவோம் என்று அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

ஈரானுடனான போர் குறித்து செய்தியாளர்களிடம் ட்ரம்ப் கூறியதாவது,

நாங்கள் ஈரானுடன் தொடர்ந்து பேச்சு நடத்தி வருகிறோம்.

இன்று எங்களது 3 போர்க் கப்பல்களை வைத்து சில பெரிய இலக்குகளை குறிவைத்து தாக்கினோம். இதில், எங்களது கப்பல்களுக்கு எந்த சேதமும் ஏற்படவில்லை. அவர்களின் சில சிறிய படகுகளை அழித்தோம்.

ஈரான் அணு ஆயுதம் வைத்திருக்க நாங்கள் ஒருபோதும் உரிமை வழங்க மாட்டோம். அதற்கு அவர்களும் ஒப்புக் கொண்டுள்ளனர்.

அவர்கள் இதில் கையெழுத்திடத் தயாராக இருக்கிறார்களா என்று பார்ப்போம். பேச்சு வார்த்தை நன்றாகச் சென்று கொண்டிருக்கின்றது. என்னை விட அவர்கள் தான் இதில் கையெழுத்திட அதிக ஆர்வமாக உள்ளனர்.

ஈரான் ஒப்பந்தத்தில் கையெழுத்திடாவிட்டால், எதிர்காலத்தில் இன்னும் கடினமாகவும், ஆக்ரோஷமாகவும் அவர்களை நாங்கள் வீழ்த்துவோம். நீங்கள் எதையும் விசாரித்துத் தெரிந்துகொள்ள வேண்டிய அவசியம் இருக்காது.

ஏனெனில், ஈரானில் இருந்து ஒரு பெரிய தீப்பிழம்பு வெளிவருவதை மட்டும் நீங்கள் பார்ப்பீர்கள். எனவே அவர்கள் இந்த ஒப்பந்தத்தில் மிக வேகமாக கையெழுத்திடுவது அவர்களுக்கு நல்லது.- என்றார்.




# உலகை உலுக்கும் ஹண்டா வைரஸ்: உலக சுகாதார அமைப்பினர் விளக்கம்!

உலகம் முழுவதும் தற்போது ஹண்டா வைரஸ் (Hantavirus) பரவல் குறித்த அச்சம் மக்களிடையே அதிகரித்துள்ளது. இது கொரோனா போல் வேகமாகப் பரவி மீண்டும் லாக்டவுன் போன்ற சூழலை உருவாக்குமா என்கிற கேள்வி எழுந்துள்ள நிலையில், உலக சுகாதார அமைப்பு (WHO) இதற்கு முக்கிய விளக்கம் அளித்துள்ளது.

வியாழக்கிழமை மாலை நடந்த பத்திரிகையாளர் சந்திப்பில் டாக்டர் மரியா வான் கெர்கோவ் தெரிவிக்கையில்,

"இது கொவிட் கிடையாது, இன்ஃப்ளுயன்ஸாவும் கிடையாது. இது பரவும் விதம் முற்றிலும் மாறுபட்டது" என்று தெரிவித்துள்ளார்.

தற்போது ஒரு சொகுசுக் கப்பலில் ஏற்பட்டுள்ள இந்தப் பாதிப்பு குறித்து விளக்கிய அவர், இதற்கு முன்பு அர்ஜென்டினாவில் ஏற்பட்ட ஆண்டிஸ் வைரஸ் (Andes virus) பாதிப்பின் போது கூட, மிக நெருக்கமான தொடர்பில் இருந்தவர்களுக்கு மட்டுமே இது பரவியது.

தற்போதைய சூழலில் கப்பலில் உள்ள பயணிகள் அல்லது ஊழியர்களுக்கு நோய் அறிகுறிகள் ஏதும் இல்லை. பொது சுகாதார நடவடிக்கைகளைச் சரியாகப் பின்பற்றினால் இந்தத் தொற்றுச் சங்கிலியை எளிதாக உடைக்க முடியும் என்று உலக சுகாதார அமைப்பு நம்பிக்கை தெரிவித்துள்ளது.

ஹண்டா வைரஸ் என்பது முக்கியமாக எலிகள் மூலம் மனிதர்களுக்குப் பரவும் ஒரு வகை நோயாகும். கொவிட்-19 காற்றில் பரவி ஒரே அறையில் இருக்கும் பலரைத் தாக்கும் தன்மை கொண்டது, ஆனால் ஹண்டா வைரஸ் அவ்வாறு பரவாது. பாதிக்கப்பட்ட ஒருவருடன் நீண்ட நேரம் மிகவும் நெருக்கமான தொடர்பில் இருந்தால் மட்டுமே இது ஒரு மனிதரிடமிருந்து மற்றொருவருக்குப் பரவ வாய்ப்புள்ளது.

எனவே, இது ஒரு உலகளாவிய பெருந்தொற்றாக மாற வாய்ப்பு மிகவும் குறைவு என்று நிபுணர்கள் விளக்குகிறார்கள்.

இந்த வைரஸ் பாதிப்பின் இன்குபேஷன் காலம் ஆறு வாரங்கள் வரை இருக்கலாம் என்பதால், வரும் நாள்களில் சில புதிய பாதிப்புகள் பதிவாக வாய்ப்புள்ளது. இருப்பினும், இதைக் கண்டு பொதுமக்கள் பீதியடையத் தேவையில்லை என்றும், உலக அளவில் இதற்கான ரிஸ்க் மிகவும் குறைவாகவே இருப்பதாகவும் உலக சுகாதார அமைப்பின் தலைவர் டாக்டர் டெட்ரோஸ் அதானோம் கெப்ரேயஸ் தெரிவித்துள்ளார்.

கொரோனா அளவுக்கு இது வேகமாகப் பரவாது என்றாலும், பாதிக்கப்பட்ட நபர்களுக்கு இது அதிக ஆபத்தை விளைவிக்கக்கூடியது என்பதால் விழிப்புணர்வு அவசியம் என்று எச்சரிக்கப்பட்டுள்ளது.

# ஹோர்முஸ் நீரிணைப் பகுதியில் ஈரான் ஏவுகணைத் தாக்குதல்கள்

ஹோர்முஸ் நீரிணைப் பகுதியில் ஈரானிய எண்ணெய் கப்பல் மீது அமெரிக்கா தாக்குதல் நடத்திய நிலையில், அதற்குப் பதிலடியாக ஈரான் ஏவுகணைத் தாக்குதல்களை முன்னெடுத்துள்ளது என்று ஈரானிய அரச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

ஈரானின் ஒளிபரப்பு நிறுவனம் ஒன்று, இராணுவ அதிகாரி ஒருவரை மேற்கோள் காட்டி வெளியிட்டுள்ள செய்தியில், ஈரானிய எண்ணெய் கப்பல் மீதான அமெரிக்காவின் தாக்குதலைத் தொடர்ந்து, அங்கிருந்த "எதிரிப் படைகள்" மீது ஈரான் ஏவுகணைகளை ஏவிப் பதிலடி கொடுத்ததாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.



இதேவேளை, ஈரானின் பண்டார் அப்பாஸ் (Bandar Abbas) மற்றும் கெஷ்ம் தீவு (Qeshm island) பகுதிகளில் பாரிய வெடிப்புச் சத்தங்கள் கேட்டுள்ளன என்று தெரிவிக்கப்படுகிறது.

கெஷ்ம் தீவு பகுதியில் கேட்கப்பட்ட வெடிப்புச் சத்தங்கள், வான் பாதுகாப்பு அமைப்பால் இடைமறிக்கப்பட்ட சிறிய ரக ஆளில்லா வானூர்திகளால் ஏற்பட்டவை எனத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

பண்டார் அப்பாஸ் பகுதியில் வான் பாதுகாப்புப் படையினரால் இரண்டு ஆளில்லா வானூர்திகள் சுட்டுவீழ்த்தப்பட்டன என்றும் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

கனடா முரசு

வெள்ளிக்கிழமை 08/05/2026

**முதியவர்களை குறிவைக்கும் கனடாவில் நிதி மோசடிகள்**

கனடாவில் முதியவர்களுக்கு எதிரான நிதி மோசடிகள் முன்னெப்போதும் இல்லாத வகையில் அதிகரித்து வருவதாக 'ஆங்கஸ் ரீட் இன்ஸ்டிடியூட்' வெளியிட்டுள்ள புதிய அறிக்கை 02▶



# கனடாவின் மேனிடோபா மாகாணத்தில் பொது சுகாதார அவசர நிலை பிரகடனம்

கனடாவின் மேனிடோபா மாகாணத்தில் எச்.ஐ.வி தொற்று விகிதம் முன்னெப்போதும் இல்லாத வகையில் அதிகரித்து வருவதால், அங்கு பொது சுகாதார அவசர நிலை பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது.

மாகாணத்தின் தலைமை பொது சுகாதார அதிகாரி டாக்டர் ப்ரெண்ட் ரூசின், நேற்று வியாழக்கிழமை காலை நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பின் போது இந்த உத்தியோகபூர்வ அறிவிப்பை வெளியிட்டார்.



கனடாவிலேயே மிக உயர்ந்த எச்.ஐ.வி தொற்று விகிதத்தை மேனிடோபா தொடர்ந்து எதிர்கொண்டு வருவதாக அவர் கவலை தெரிவித்தார். 02▶

# கனடாவில் நூதன முறையில் கடத்தப்பட்ட 250 கிலோ கொக்கெய்ன் மீட்பு: மூவர் கைது

கனடாவின் ஹாலிஃபாக்ஸ் துறைமுகத்தில், டொமினிகன் குடியரசிலிருந்து வந்த கப்பல் கொள்கலன் ஒன்றிலிருந்து சுமார் 248.7 கிலோகிராம் நிறையுடைய கொக்கெய்ன் போதைப் பொருளை கனடா எல்லைப் பாதுகாப்பு முகமை (CBSA) அதிகாரிகள் கைப்பற்றியுள்ளனர்.

கடந்த மார்ச் 3 ஆம் திகதி எக்ஸ்-ரே தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி அதிகாரிகள் நடத்திய சோதனையில், கொள்கலனுக்குள் இருந்த 1,178 பொதிகள் கண்டறியப்பட்டன.

இந்த போதைப்பொருள் 02▶






## கனடாவில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பொதிகள் அனைத்தும் கார்பன் காகிதங்களால் சுற்றப்பட்டு, தட்டையான ரொட்டிகளுக்குள் மிக நுணுக்கமாக மறைத்து வைக்கப்பட்டிருந்தமை விசாரணையில் தெரியவந்தது.

இந்த பாரிய கடத்தல் விவகாரம் தொடர்பாக மொன்றியலைச் சேர்ந்த 58 வயதுடைய பீட்டர் பொம்பியோ என்பவர் இறக்குமதியாளராக அடையாளம் காணப்பட்டுள்ளதுடன், அவருக்கு உதவியாகச் செயற்பட்ட ஒன்டாரியோவைச் சேர்ந்த டெய்லர் பிக்ஸ்பி மற்றும் சக்கரி டேனியல் அர்டிசி ஆகிய மூவரும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

ஒரு ஒழுங்கமைக்கப்பட்ட குற்றக் கும்பலினால் முன்னெடுக்கப்பட்ட இந்த கடத்தல் முயற்சி முறியடிக்கப்பட்டுள்ள நிலையில், கைது செய்யப்பட்ட மூவர் மீதும் போதைப்பொருள் இறக்குமதி மற்றும் கடத்தல் சதி உள்ளிட்ட பல்வேறு குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டுள்ளன.

சந்தேகநபர்கள் மூவரும் வரும் மே 13 ஆம் திகதி ஒன்டாரியோ நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்படவுள்ளனர்.

## கனடாவின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

புள்ளிவிவரங்களின்படி, 2024 ஆம் ஆண்டில் மேனிடோபாவில் ஒரு லட்சம் பேருக்கு 19.5 பேர் என்ற விகிதத்தில் தொற்று பதிவாகியுள்ளது.

இது கனடாவின் தேசிய சராசரி விகிதமான 5.5 உடன் ஒப்பிடுகையில் சுமார் 3.5 மடங்கு அதிகமாகும். கடந்த 2021 ஆம் ஆண்டில் 142 ஆக இருந்த புதிய எச்.ஐ.வி பாதிப்புகளின் எண்ணிக்கை, கடந்த ஆண்டில் 328 ஆக உயர்ந்துள்ளது.

இந்த சடுதியான உயர்வு மிகவும் கவலைக்குரியது எனக் குறிப்பிட்ட டாக்டர் ரூசின், இதனை எதிர்கொள்ள அரசாங்கங்கள், சமூக அமைப்புகள் மற்றும் சுகாதார அமைப்புகளுக்கு இடையே ஒருங்கிணைந்த செயல்பாடு அவசியம் என வலியுறுத்தினார்.

போதைப்பொருள் ஊசி பயன்பாடு, வீடற்ற நிலை, மனநலப் பிரச்சினைகள் மற்றும் ஏனைய பால்வினைத் தொற்று நோய்களின் அதிகரிப்பு போன்றவை இந்தத் தொற்று பரவலுக்கு முக்கிய காரணங்களாகக் கூறப்படுகின்றன.

குறிப்பாக, வடக்கு மற்றும் பிரெய்ரி மவுண்டன் பகுதிகளில் அதிக தொற்று விகிதமும், வின்னிபெக் (Winnipeg) நகரில் அதிக எண்ணிக்கையிலான பாதிப்புகளும் பதிவாகியுள்ளன.

இதில் பழங்குடியின மக்கள் விகிதாசார ரீதியாகப் பெருமளவில் பாதிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## முதியவர்களை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

எச்சரித்துள்ளது.

கடந்த 2024 ஆம் ஆண்டில் 645 மில்லியன் டொலர்களாக இருந்த மோசடி இழப்பு, கடந்த ஆண்டில் 704 மில்லியன் டொலர்களாக உயர்ந்து சாதனை படைத்துள்ளது என கனடிய மோசடி எதிர்ப்பு மையம் தெரிவித்துள்ளது.

2022 ஆம் ஆண்டிலிருந்து கணக்கிட்டால், ஒட்டுமொத்தமாக 2.4 பில்லியன் டொலர்களுக்கும் அதிகமான தொகை மக்களிடமிருந்து மோசடி செய்யப்பட்டுள்ளது.

பாதிக்கப்பட்டவர்களில் 5 முதல் 10 சதவீதத்தினர் மட்டுமே அதிகாரிகளிடம் புகார் அளிப்பதால், உண்மையான இழப்புத் தொகை இதைவிட பல மடங்கு அதிகமாக இருக்கும் என நம்பப்படுகிறது.

18 முதல் 29 வயதுடைய இளைஞர்களை விட, 60 வயதுக்கு மேற்பட்ட முதியவர்கள் மோசடிகளுக்கு ஆளாகும் வாய்ப்பு இரண்டு மடங்கு அதிகமாக உள்ளது.




கனடாவில் முதியவர்களின் எண்ணிக்கை அதிகரித்து வருவதுடன், செயற்கை நுண்ணறிவு போன்ற நவீன தொழில்நுட்பங்களைப் பயன்படுத்தி மோசடியாளர்கள் மக்களை ஏமாற்றுகின்றமை இதற்கு முக்கிய காரணமாகும்.

அதிர்ச்சிகரமான தகவல் என்னவென்றால், பல சந்தர்ப்பங்களில் குடும்ப உறுப்பினர்களே இத்தகைய நிதிச் சுரண்டல்களில் ஈடுபடுகின்றனர் என கண்டறியப்பட்டுள்ளது.



# திமிங்கலத்தின் மீது படகை மோதிய நபர்

கனடாவின் வான்கூவரில், திமிங்கலம் ஒன்றின் மீது படகின் மூலம் ஒருவர் மோதியுள்ளார். இந்தச் சம்பவம் கண்காணிப்பு கமராவில் பதிவாகியுள்ளது.

வான்கூவரிலுள்ள Stanley Park என்னுமிடத்தினருகில் மூச்சு விடுவதற்காக திமிங்கலம் ஒன்று தண்ணீர் பரப்புக்கு வந்துள்ளது.

அதாவது, spout எனப்படும் இந்த நிகழ்வின்போது, திமிங்கலங்கள் தண்ணீர் பரப்புக்கு அருகில் வந்து மூச்சுக்காற்றை வெளியிடும்போது, தண்ணீர் நீரூற்று போல பீய்ச்சி அடிக்கப்படும்.

அந்த திமிங்கலம் மூச்சுக் காற்றை வெளியிடுவதற்காக தண்ணீர் பரப்புக்கு வர, அந்தப் பகுதியில் ஜெட் ஸ்கீ வகை படகில் ஒருவர் பயணித்துக் கொண்டிருந்திருக்கிறார்.

திமிங்கலம் தண்ணீர் பரப்புக்கு வரும் நேரத்தில் சரியாக அந்த நபரின் ஜெட் ஸ்கீ அங்கு வர, ஜெட் ஸ்கீ திமிங்கலத்தின் மீது மோதிவிட்டது.

மோதிய வேகத்தில் ஜெட் ஸ்கீயும் அந்த நபரும் தூக்கி வீசப்படுகின்றமையும், பின்னர் அவர் தண்ணீரில் மிதந்துகொண்டிருக்கின்றமையும் வெளியாகியுள்ள கண்காணிப்பு கமராவில் பதிவாகியுள்ளது.

தூக்கி வீசப்பட்ட அந்த நபர் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ள நிலையில், அவர் ஆபத்தான நிலையில் இருக்கின்றார் என பிரிட்டிஷ் கொலம்பியா அவசர மருத்துவ சேவைகள் அமைப்பு தெரிவித்துள்ளது.

அதே நேரத்தில், படகு மோதியதில் அந்த திமிங்கலத்துக்கு ஏதாவது பாதிப்பு ஏற்பட்டுள்ளதா என்பதை அறிய கடல்வளத்துறை அதிகாரிகள் ஒரு குழுவை அனுப்பியுள்ளார்கள்.

அந்தக் குழுவினர் அந்த திமிங்கலத்தை ஆய்வு செய்தபோது, அதற்குக் காயங்கள் எதுவும் ஏற்படவில்லை என்பதும், அது சாதாரணமாக உணவு உட்கொண்டுவருவதும் தெரியவந்துள்ளது.

